ஸ்ரீ அகத்தியர் துணை

**ஞானிகள் அருளிய**

# தினசரி பாராயண நூல்

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத் தொண்டர்களுக்காக தொகுத்து வழங்குபவர்

**குருநாதர்**

**தவத்திரு ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,**
**ஓங்காரக்குடில்,**
115, நகர் விரிவாக்கம், துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி : 04327–255684, 255384.

– –

உரிமை : துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்திற்கே
முதற்பதிப்பு : 23.04.2000
இரண்டாம் பதிப்பு : 17.09.2000
மூன்றாம் பதிப்பு : 14.04.2001

வெளியீடு : ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம்,
ஓங்காரக்குடில்
115, நகர் விரிவாக்கம், துறையூர் – 621 010.
திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.
தொலைபேசி எண்கள்
எஸ்.டி.டி. : 04327
குருநாதர் : 255684
அலுவலகம் : 255384, 255184.
Fax : 255284
E-mail; : agathesa@eth.net

**18.04.2000, செவ்வாய்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று** திருச்சி சங்கிலியாண்டபுரத்திலுள்ள ஸ்ரீ அகத்தியர் நாடி ஜோதிட நிலையத்தில், ஓங்காரக்குடிலாசான் தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்** அவர்களுக்கு ஆசான் அகத்தீசர் சுவடிமூலம் அருளிய அருள்வாக்கு.

## ஆசான் அகத்தீசர் ஆசி காண்டம்.

ஓம்கார பரம்பொருளே அரங்கா போற்றி
ஓம்கார குடில் வாழும் அரசா போற்றி
ஓம்கார ஜோதியே தேசிகா போற்றி
ஓதிடுவேன் கும்பன் யான் ஆசிபாகம் 1.

ஆசியதும் விக்ரம ஆண்டு தகரின் (சித்திரை) திங்கள்
அளித்திடுவோம் முழுமதிநாள் இன்றுநாளில்
ஆசியுண்டு அரங்கர்புகழ் ஓங்க ஆசி
**அன்பர்களும் தொண்டர்களும் உயர்வார் ஆசி** 2.

ஆசியே ஞானிகளின் ஆசியுண்டு
அருள்ஞானம் அளிக்க வந்தாய் அரங்கா நீயே
ஆசியினால் அகிலமதை காப்பாயப்பா
அவதார கல்கியே வாழ்க வாழ்க 3.

வாழ்க வாழ்க பல்லாண்டு ஆட்சிசெய்வாய்
வருமுலகில் உன்குடிலே உலகம் காக்கும்
வாழ்வளிக்கும் பொற்சபையே உந்தன் சபையே
வரமளித்து காத்திடுவாய் மக்கள் தன்னை 4.

**தன்னிலே ஜாதிமத பேதம் நீக்கி**
தரணியிலே ஆன்மீகம் வளரச் செய்வாய்
நன்மைதனை தானளிப்பாய் மக்களுக்கு
நல்லாட்சி உன்ஆட்சி உயர்ந்த ஆட்சி 5.

**ஆட்சியே மலேயநாட்டு அன்பர்யாவும்**
**அகிலமெங்கும் தொண்டுசெய்வார் குடில்பணி சிறக்க**
ஆட்சியே ஞானிகள் ஆட்சி அரங்கர் ஆட்சி
அவனியெங்கும் உன்ஆட்சி சிறக்குமப்பா 6.

அப்பனே இன்றுநாள் முழுமதி விழாவில்
**அவனியெங்கும் குடில்ஓங்க வைப்போம் நன்றாய்**
ஒப்பில்லா உலகமெங்கும் ஓங்காரம் ஓங்க
உன்ஜோதி பிரகாசிக்க அளிப்போம் ஆசி 7.

ஆசியே ஓம்கார ஜோதி ஓங்க
**அவனியிலே தொண்டர்களும் ஞானம் அடைய**
ஆசியுண்டு இதன்காலம் அளிப்போம் நன்றாய்
அகமும் புறமும் அருள்ஒளி ஓங்க 8.

ஓங்கார குடில் ஓங்க ஆசியுண்டு
உன் ஆக்கை ஜோதியாகும் காலம் ஆகும்
ஓங்காரன் உன்நாளே முழுமதிநாளே
ஓங்கார குடிலதனில் இன்று நாளில் 9.

நாளதனில் மாணிக்க வாசகனும் ஔவை
நல்யூகி திருமூலன் ஞானசம்பந்தனும்தான்
காலமதில் கருவூரார் திருவள்ளுவரும்
கௌசிகரும் வசிஸ்டனும் புலஸ்தியரும்தான் 10.

தான்புகல பாம்பாட்டி அப்பர் சுந்தரர்
தவமுனிகள் சுகப்பிரம்மர் கார்க்கை புஜண்டர்
தன்வந்திரி சிவயோகமா முனிவருடன்
தரணியிலே பதினென் சித்தர் ஆசி 11.

ஆசியதை அளித்திடுவார் இதுநாள் தன்னில்
**அறுமுகனும் அரங்கருள் இருந்து ஆசி**
ஆசியுடன் அருள்மொழிகள் வழங்குவார்தான்
அவனியிலே குடில் அன்பர் தொண்டர் யாவும் 12.

**தொண்டர்கள் ஞானியாவார் ஆசியுண்டு**
**தெரிவிக்கும் வழிநடக்க உயிரனுபவம் தோன்றும்**
**உண்டாகும் தத்துவாதீதம் என்போம்**
உள்ளும் புறமும் அருளும் கூடி 13.

கூடியே ஓம்கார ஜோதி எழும்பும்
குவலயத்தில் இனிவரும் காலங்களில்
**நாடியே உதயகாலம் பிரம்ம முகூர்த்தத்தில்**
**நானிலத்தில் குடில் மெய்யன்பர் அனைவரும் 14.**

அனைவரும் புஜண்டர் மண்டபம் அமர்ந்து
ஆதரவாய் குசன்திசை (தென்திசை) நோக்கியமர்ந்து
இணையிலா மெய்ஞான ஐம்பத்தொன்று தீபம் ஏற்றி
இவ்வுலகில் கதிர்வாரம் சிவபுராணம் 15.

புராணமதும் மாணிக்க வாசகர் உரைத்த
புராணமதை ஒன்றாக படித்திடல் வேண்டும்
தரணியிலே திங்கள்நாள் கீர்த்திதிரு அகவல்
தான்செவ்வாய் போற்றித்திரு அகவல் ஆகும் 16.

**ஆகுமே மாணிக்க வாசகர் சொன்ன**
**அரும் நூலை படித்திட வேண்டுமப்பா**
யோகபுதன் திருமூலர் திருமந்திர உபதேசபகுதி
உயர்குருவாரமதில் சுத்தசன்மார்க்க வேண்டுகோள் பாராயணம் 17.

பாராயணம் வெள்ளியதில் ஞானசம்பந்தன் அருளிய
பாருலகின் கோளறு பதிகம் ஆகும்
தரணியிலே சனிவாரம் ஔவை அருளிய விநாயகர் அகவல்
தாமுரைக்க பௌர்ணமியும் பூசம் நாளிலும் 18.

நாளதனில் பிரம்ம முகூர்த்தம் தன்னில்
நலமாக அருட்பெருஞ்சோதி அகவல் பாராயணம்
காலமதில் மெய்யன்பர்கள் படித்திடல் வேண்டும்
குருமுனியாம் அரங்கர் ஜோதி ஆகும் காலம் 19.

காலமே மெய்யன்பர்கள் ஒன்று கூடி
கதிர் உதயம் முன் காலம் பிரம்ம முகூர்த்தம்
காலமதில் முறைசெய்ய ஞானம் கைகூடும்
கண்டுரைக்க ஆசானுக்கும் உள்ஜோதி எழும்பி 20.

எழும்பியே அவரவர்க்கும் ஆசி ஓங்கி
இறைஞான நிலையடைவார் ஆசியுண்டு
தெளிவாக இம்முறைகள் மெய்யன்பர் அனைவரும்
தொடர்ந்து செய்ய ஞானமெங்கும் சிறக்கும் நன்றாய் 21.

நன்றுபெற ஆசானின் ஜோதி காட்சி
நானிலத்தில் அவரவரும் கண்டு மகிழ்வார்
நன்றில்லா வினையகன்று ஞானியாவார்
நானிலத்தில் பேரின்ப நிலைகள் ஓங்கும் 22.

ஓங்கியே ஓங்கார குடில்புகழும்
**ஓங்கியே உலகாட்சி சடுதியில் ஓங்கும்**
ஓங்கிட உலகமக்கள் நலனைக் காண
ஓங்கார அரங்கரின் ஜோதி ஓங்க 23.

ஓங்கவே மெய்யன்பரும் ஞானியாக
உலகத்தில் ஞானிகளாட்சி சிறப்பும் காண
ஓங்கார குடிலதனிலே இம்முறை செய்தால்
ஓங்காரம் பொங்கிஎழும் உலகை ஆளும் 24.

ஆளுகின்ற காலமிது வழியைச் சொன்னேன்
அகத்தியர்யான் ஆசியதை அளித்தேன் இன்னாள்
**ஆளுகின்ற முறை சடுதி ஓங்க ஆசி**
அளித்திட்டேன் பரிபூரண ஆசிதன்னை 25.

தன்னிலே ஆசான் ஆக்கை (உடம்பு) காயசித்தி
தான்ஆகி மாற்றங்கள் காணும் நன்றாய்
நன்மைபெற இம்முறைகள் அன்பர்கள் காண
நலமுண்டு ஞானநிலை அடைவார் நன்றே 26.

நன்றான அரங்கர் அருள் உலக சபையில்
நானிலத்தில் உன்னத நிலையை அடையும்
நன்றான காலமிது மார்க்கம் சொன்னேன்
நலமுண்டு அன்பர்களுக்கும் தொண்டர்களுக்கும்தான் 27.

தான்புகல அறிகின்ற தொண்டர்களுக்கும்
தரணியிலே ஞானிகளின் ஆசியுண்டு
நன்மைபெற இதன்காலம் வழங்கினேனே
நாட்டிவந்த ஆசிநூல் இப்பாகம் முற்றும் முற்றே. 28.

....சுபம்....

**அன்புள்ள சன்மார்க்க அன்பர்களே**

இக்காலம் ஞானசித்தர் காலம் என்பதனால் நமது குருநாதர் அவர்களுக்கு ஞானம் சித்திக்கும் காலம் சடுதியில் இருப்பதால் குடில் தொண்டர்களும் அன்பர்களும் இந்த அரிய சந்தர்ப்பத்தில் அருள்பெற்று ஞானம் சித்திபெறவேண்டும் என்று 18.04.2000 செவ்வாய் கிழமை சித்ராபௌர்ணமி அன்று ஆசான் அகத்தீசர் தம்சுவடிமூலம் அருள்வாக்கு அருளியுள்ளார்கள்.

குசன் திசையாகிய தெற்கு திசைநோக்கி அமர்ந்து தினமும் பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை 4.30 மணிமுதல் 6.00 மணிக்குள் 51 ஞானதீபம் ஏற்றி ஞாயிற்றுக்கிழமையன்று மகான் மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணத்தையும், திங்கட்கிழமையன்று மகான் மாணிக்கவாசகர் அருளிய கீர்த்தித் திருஅகவலையும், செவ்வாய் கிழமையன்று மகான் மாணிக்கவாசகர் அருளிய போற்றித்திரு அகவலையும், புதன்கிழமையன்று மகான் திருமூலர் அருளிய திருமந்திர உபதேசப் பகுதியையும், வியாழக்கிழமையன்று அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள் இயற்றிய சுத்தசன்மார்க்க வேண்டுகோளையும், வெள்ளிக்கிழமையன்று மகான் திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகத்தையும், சனிக்கிழமையன்று ஞானக்கடல் ஔவை இயற்றிய விநாயகர் அகவலையும், மேலும் பௌர்ணமி அன்றும் பூசம்

நாளிலும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய இராமலிங்கசுவாமி இயற்றிய அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் செய்ய வேண்டுமென்றும் ஆசான் அகத்தீசர் அவர்கள் மெய்யன்பர்களுக்கு அருளியுள்ளார்கள்.

ஞானத்தை அடைய விரும்புகிறவர்களுக்கு, பிரம்ம முகூர்த்த நேரமாகிய அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணிவரைதான் வழிபாட்டுக்கு உகந்த நேரமாகும். அந்த நேரம் மனம் அமைதியாக இருக்கும். புலன்கள் ஒடுங்கும். அது அமிர்த காற்று விசக்கூடிய அற்புதமான நேரம்.

மேற்கண்ட பூஜா விதிகளும், பாராயணங்களும் செய்துவந்தால், முன்செய்த பாவங்கள் தீரும், புண்ணியம் பெருகும், உயிர் அனுபவம் அறியப்படும். உலக மாற்றம் வெகுவிரைவில் இருப்பதால் அன்பர்களும் தொண்டர்களும் சலிப்பில்லாமல் பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணிக்குள் மகான் புஜண்ட மகரிஷி மண்டபத்தில் நாம் கூடவேண்டும். அப்படி கூடி பாராயண வழிபாடு செய்தால் மகத்துவம் பொருந்திய மகான் மாணிக்கவாசகர் ஆசியும், மாமன்னன் திருமூலதேவர் ஆசியும், அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஆசியும், ஆசான் திருஞானசம்பந்தர் ஆசியும், அணுவில் அணுவைக் கண்ட ஔவை அவர்களின் ஆசியும் கிடைக்கும்.

நடைபெறுகின்ற பாராயண வழிபாட்டில், எல்லா மதத்தைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டு பாராயணம் செய்து அருள்பெறலாம்.

**குறிப்பு** : உலகமக்கள் அனைவரையும் கடவுளின் பிள்ளைகளாகப் பார்ப்பவர்கள்தான் ஞானியாக முடியும். ஜாதி மத துவேசம் மனதில் இருந்தால் இன்னும் இவர்களுக்கு பக்குவம் வரவில்லை என்று ஞானிகள் அருள்செய்யமாட்டார்கள். எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணி, அன்பு செலுத்தாவிட்டால் ஜீவகாருண்ய அறிவு உண்டாகாது.

எனவே, இந்த பூஜையில் கலந்துகொள்கிறவர்கள் உயிரைச் கொல்லுதலும், அதன் உடம்மை உண்ணுதலும் கூடாது என்பது அன்பான வேண்டுகோளாகும். இதற்கு முன் புலால் உணவு உண்டிருந்தாலும் அதை மாற்றி இன்றுமுதல் புலால் உணவை மறுத்து, சுத்த சைவ உணவை மேற்கொள்ளவேண்டும்.

**எனவே, அன்பர்களும் தொண்டர்களும் தொடர்ந்து பூஜைசெய்து ஆசிபெற்று எல்லா நலமும் பெறவேண்டும்.**

–

**குருநாதர்**

**தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களின் அருளுரை**

ஓம் அகத்தீசாய நம!

அன்புள்ள சன்மார்க்க அன்பர்களே

இந்த நூலில் மகான் மணிமொழி மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம், கீர்த்தித் திருஅகவல், போற்றித் திருஅகவல், மகான் திருமூலதேவர் அருளிய திருமந்திர உபதேசம் 30, அடுத்து மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய சுத்தசன்மார்க்க வேண்டுகோள், மகான் திருஞானசம்பந்தர் அருளிய கோளறு பதிகம் மற்றும் ஔவையார் அருளிய விநாயகர் அகவல் மேலும் மகான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய அருட்பிரகாச வள்ளலார் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவலும் இடம் பெற்றுள்ளது.

தினசரி பாராயணமாகிய இந்த வழிபாட்டை துறையூர் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க ஓங்காரக்குடில் மகான் புஜண்ட மகரிஷி மண்டபத்தில் அன்பர்கள் தினமும் பிரம்ம முகூர்த்தமாகிய அதிகாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை கூடி பாராயணம் செய்யவேண்டும் என்றும், அப்படி செய்யும் காலத்தில் 51 ஞானதீபம் ஏற்றி, தென்திசை நோக்கி அமர்ந்து பாராயணம் செய்தால் முன்செய்த தீவினைகள் நீங்கி புண்ணியம் பெருகும் என்றும், தொண்டர்களும் அன்பர்களும் ஞானியாவார்கள் என்றும், உடம்பைப்பற்றியும் உயிரைப்பற்றியும் அறிந்துகொள்ளும் அநுபவம்

உண்டாகும் என்றும், உடல்கூறு தத்துவத்தைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம் என்றும், மேலும், உள்ளும் புறமும் அருள் ஓங்கும் என்றும், மேலும்மேலும் பாராயணம் செய்து பூஜித்துவந்தால் ஓங்கார ஜோதி நம்முள் தோன்றும் என்றும், மகான்களாகிய மாணிக்கவாசகர், திருமூலர், இராமலிங்க சுவாமிகள், திருஞானசம்பந்தர், ஔவையார், அகத்தீசர் மற்றும் நவகோடி சித்தர்களின் ஆசியும் அன்பர்களுக்குக் கிடைக்கும் என்றும், அதன்மூலம் மரணமிலாப் பெருவாழ்வு பெற்று பேரின்பம் பெறுவார்கள் என்றும் ஆசான் அகத்தீசர் தம்சுவடிமூலம் 18–04–2000 அன்று அருள்வாக்கு அருளியுள்ளார்.

எனவே, இந்த அரிய வாய்ப்பை நன்கு பயன்படுத்தி ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ளவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நூல் முற்றுபெற்ற முனிவர்கள் அருளியதால் சன்மார்க்க அன்பர்களும், பெரியோர்களும், தாய்மார்களும் இதை பயபக்தியோடு தொட்டு வணங்கி பாராயணம் செய்துவந்தால் பெறுதற்கரிய இந்த மானுட பிறவியை பொன்னுடம்பாக்கிக் கொள்ளலாம்.

**ஞானிகளை பூஜிப்போம், எல்லா நன்மைகளும் பெற்று இன்புற்று வாழ்வோம்.**

**ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்க தொண்டர்களுக்காக**
**ஸ்ரீஅகத்தியர் சன்மார்க்க சங்கம்.**
**வெளியீடு : 23–04–2000**

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே

**திருமந்திரம் –1598.**

கல்கி அவதாரமாகிய, மோனநிலைகண்ட உலகப்பேராசான்,
ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல், குருநாதர்
தவத்திரு **ரெங்கராஜ தேசிக சுவாமிகள்**
அவர்கள் தொகுத்து வழங்கிய

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஓம் அகத்தியர் திருவடிகள் போற்றி
ஓம் அகப்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் அசுவினித்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் அத்திரி மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் அநுமான் திருவடிகள் போற்றி
ஓம் அம்பிகானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் அருணகிரிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் அருள்நந்திசிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் அல்லமாபிரபு திருவடிகள் போற்றி
ஓம் அழுகண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி 10

ஓம் இடைக்காடர் திருவடிகள் போற்றி
ஓம் இராமலிங்கசுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் இராமதேவர் திருவடிகள் போற்றி
ஓம் இராமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் உமாபதி சிவாச்சாரியார் திருவடிகள் போற்றி
ஓம் ஔவையார் திருவடிகள் போற்றி
ஓம் கஞ்சமலைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடைப்பிள்ளைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கடுவெளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கண்ணானந்தர் திருவடிகள் போற்றி 20

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி

ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30

ஓம் கணராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40

ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50

ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி

ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுகப்பிரம்மர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சுந்தரமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் சூதமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சூரியானந்தர் திருவடிகள் போற்றி 60

ஓம் சூலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சேதுமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சொரூபானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் ஜம்பு மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் ஜமதக்னி திருவடிகள் போற்றி
ஓம் ஜனகர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனந்தனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனாதனர் திருவடிகள் போற்றி
ஓம் ஜனக்குமாரர் திருவடிகள் போற்றி
ஓம் ஜெகநாதர் திருவடிகள் போற்றி 70

ஓம் ஜெயமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் ஞானச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் டமாரானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் தன்வந்திரி திருவடிகள் போற்றி
ஓம் தாயுமான சுவாமிகள் திருவடிகள் போற்றி
ஓம் தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருகோணச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருஞானசம்பந்தர் திருவடிகள் போற்றி
ஓம் திருநாவுக்கரசர் திருவடிகள் போற்றி
ஓம் திருமாளிகை தேவர் திருவடிகள் போற்றி 80

ஓம் திருமூலதேவர் திருவடிகள் போற்றி
ஓம் திருவள்ளுவர் திருவடிகள் போற்றி
ஓம் தூர்வாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் தேரையர் திருவடிகள் போற்றி
ஓம் நந்தனார் திருவடிகள் போற்றி

ஓம் நந்திஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் நாதாந்தசித்தர் திருவடிகள் போற்றி
ஓம் நாரதர் திருவடிகள் போற்றி
ஓம் நொண்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பட்டினத்தார் திருவடிகள் போற்றி 90

ஓம் பத்ரகிரியார் திருவடிகள் போற்றி
ஓம் பதஞ்சலியார் திருவடிகள் போற்றி
ஓம் பரத்துவாசர் திருவடிகள் போற்றி
ஓம் பரமானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் பராசரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பாம்பாட்டிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பிங்களமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் பிடிநாகீசர் திருவடிகள் போற்றி
ஓம் பிருகுமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் பிரும்மமுனிவர் திருவடிகள் போற்றி 100

ஓம் பிர்முகமது திருவடிகள் போற்றி
ஓம் புண்ணாக்கீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலத்தீசர் திருவடிகள் போற்றி
ஓம் புலிப்பாணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் பூனைக்கண்ணார் திருவடிகள் போற்றி
ஓம் போகமகாரிஷி திருவடிகள் போற்றி
ஓம் மச்சமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் மஸ்தான் திருவடிகள் போற்றி
ஓம் மயூரேசர் திருவடிகள் போற்றி
ஓம் மாணிக்கவாசகர் திருவடிகள் போற்றி 110

ஓம் மார்க்கண்டேயர் திருவடிகள் போற்றி
ஓம் மாலாங்கன் திருவடிகள் போற்றி
ஓம் மிருகண்டரிஷி திருவடிகள் போற்றி
ஓம் முத்தானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் மெய்கண்டதேவர் திருவடிகள் போற்றி
ஓம் மௌனசித்தர் திருவடிகள் போற்றி

ஓம் யாகோபு திருவடிகள் போற்றி
ஓம் யூகிமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் யோகச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் யோகானந்தர் திருவடிகள் போற்றி 120

ஓம் ரோமரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வசிஷ்டமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரதரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வரரிஷி திருவடிகள் போற்றி
ஓம் வராகிமிகி திருவடிகள் போற்றி
ஓம் வால்மீகி திருவடிகள் போற்றி
ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131

**ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள் திருவடிகள் போற்றி போற்றி.**

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தான்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம்.

## ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க கொள்கைகள்

ஜீவகாருண்யமும், பசியாற்றுவித்தலும், கடவுள் அகத்தீசன்தான் என்று அறிந்து திருவடியை பூஜைசெய்தலுமே ஆகும்.

உ

## மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணம்
## திருப்பெருந்துறையில் அருளியது

### சிவனது அநாதி முறைமையான பழமை
### கலிவெண்பா

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன்தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்நிறைந்து எல்லையிலாதானே! நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிக்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா!
பொய்யாயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ் ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!

கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!

நிறங்கள் ஓர் ஐந்துடையயாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன்தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவில்லாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்னிருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும் எம்காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே! உடையானே!
வேற்று விகாரவிடக் குடம்பினுட் கிடப்ப
ஆற்றேன்! எம் ஐயா! அரனே! ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லற் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# கீர்த்தித் திருஅகவல்

தில்லையில் அருளியது

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை

**நிலைமண்டில ஆசிரியப்பா**

**திருச்சிற்றம்பலம்**

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
எண்ணில் பல்குணம் எழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகும்
துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

என்னுடை யிருளை ஏறத் துரந்தும்
அடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பும்
மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்

கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புறவு எய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடும்
எஞ்சா தீண்டும் இன்னருள் விளைத்தும்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்

விராவு கொங்கை நற்றடம் படிந்தும்
கேவேட ராகிக் கெளிறது படுத்தும்
மாவேட்ட டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந்து
உற்றஐம் முகங்க ளாற்பணித் தருளியும்

நந்தம் பாடியில் நான்மறை யோனாய்
அந்தமில் ஆரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்
நூறுநூ றாயிரம் இயல்பின தாகி
ஏறுடை ஈசன் இப்புவனியை உய்யக்

கூறுடை மங்கையுந் தானும் வந்தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதுர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்

தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவும்
மொக்கணி யருளிய முழுத்தழல் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையும்
அரியொடு பிரமற் களவறி யொண்ணான்

நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருள அழகுறு திருவடி
பாண்டியன் தனக்குப் பரிமா விற்று
ஈண்டு கனகம் இசையப் பெறாஅது
ஆண்டான் எம்கோன் அருள்வழி யிருப்பத்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்
அந்தண னாகி ஆண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

ஆங்கது தன்னில் அடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்
உத்தர கோச மங்கையு ளிருந்து

வித்தக வேடங் காட்டிய இயல்பும்
பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்

தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்

பூவலம் அதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ ாநச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனில்

குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமும்

மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையும்
ஓரி யூரில் உகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னில் ஈண்ட இருந்தும்

தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையும்
தேனமர் சோலைத் திருவா ரூரில்
ஞானந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட இருந்தும்

படிமப் பாதம் வைத்தஅப் பரிசும்
ஏகம் பத்தில் இயல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும்
திருவாஞ் சியத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்

சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசும்
கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்
ஈங்கோய் மலையில் எழிலது காட்டியும்
ஐயா றதனிற் சைவ னாகியும்

துருத்தி தன்னில் அருத்தியோ டிருந்தும்
திருப்பனை யூரில் விருப்ப னாகியும்
கழுமல மதனிற் காட்சி கொடுத்தும்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனில் அறம்பல அருளியும்

குற்றா லத்துக் குறியா யிருந்தும்
அந்தமில் பெருமை அழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்

தானே யாகிய தயாபரன் எம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியும்
மந்திர மாமலை மகேந்திர வெற்பன்

அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
ஆற்றல் அதுவுடை அழகமர் திருவுரு

நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்
ஊனந் தன்னை யொருங்குடன் அறுக்கும்

ஆனந்த தம்மே ஆறா அருளியும்
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும்
அழுக்கடை யாமல் ஆண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியும்

மூலமாகிய மும்மலம் அறுக்கும்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
ஏல்வுடைத் தாக எழில்பெற அணிந்தும்
அரியொடு பிரமற் களவறி யாதவன்

பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமும்
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் அடியரைப் பரம்பரத் துய்ப்பவன்
உத்தர கோச மங்கையூ ராகவும்

ஆதி மூர்த்திகட்கு அருள்புரிந் தருளிய
தேவ தேவன் திருப்பெய ராகவும்
இருள்கடிந் தருளிய இன்ப வூர்தி
அருளிய பெருமை அருள்மலை யாகவும்
எப்பெருந் தன்மையும் எவ்வெவர் திறமும்

அப்பரி சதனால் ஆண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுள்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறும் அடியவர்

ஒன்ற வொன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதார் எரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவிழ்ந் தலறியும்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி

நாத நாத என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்று
இதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறும் இமயத் தியல்புடை யம்பொன்

பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்கு
அருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

**மகான் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய**

**போற்றித் திருவகவல்**

**தில்லையில் அருளியது**

சகத்தின் உற்பத்தி

**நிலைமண்டில ஆசிரியப்பா**

திருசிற்றம்பலம்

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
ஈரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்று
அடிமுடி யறியும் ஆதர வதனிற்

கடுமுரண் ஏன மாகி முன்கலந்து
ஏழ்தலம் உருவ இடந்து பின்னெய்த்தும்
ஊழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யினணகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கடல் உலகினில்

யானை முதலா எறும்பீ றாய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்
மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்

இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
ஈரிரு திங்களிற் பேரிருள் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறலர் பிழைத்தும்

ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்

ஆண்டுகள் தோறும் அடைந்தஅக் காலை
ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்

ஒருங்கிய சாயல் நெருங்கியுள் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
எய்த்திடை வருந்த எழுந்து புடைபரந்து

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்

புல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின

ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திக் பேசி நாத்தழும்பு ஏறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரதமே பரமாக வேதியரும்

சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னும்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து

உலோகா யதனெனும் ஒண்திறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்

தொழுதுள முருகி அழுதுடல் கம்பித்து
ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறா அன்பில்
பசுமரத் தாணி அறைந்தாற் போலக்

கசிவது பெருகிக் கடலென மறுகி
அகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பேய் என்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாகக் கோணுத லின்றிச்

சதுரிழந் தறிமால் கொண்டு சாரும்
கதியது பரமா அதிசய மாகக்
கற்றா மனமெனக் கதறியும் பதறியும்
மற்றோர் தெய்வங் கனவிலும் நினையாது
அருபரத் தொருவன் அவனியில் வந்து

குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி

அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாதவென் றரற்றி
உரைதடு மாறி உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதயம் மலரக்
கண்களி கூர நுண்துளி அரும்பச்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்

கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி

கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி

மின்னா ருருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆஆ என்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி

இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி

வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி உணர்வே போற்றி

கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி

வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி

வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த ஒருவ போற்றி
விரிகடல் உலகின் விளைவே போற்றி

அருமையில் எளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையும் ஒருவ னாக்கி இருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி

தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மிகழ்ந்தாய் போற்றி

வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி

நனவிலும் நாயேற் கருளினை போற்றி
இடைமரு துறையும் எந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரு ரமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி

ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி

குற்றா லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி

அடைந்தவர்க் கருளும் அப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்கு
அத்திக் கருளிய அரசே போற்றி
தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளும் இறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் தமியேன் போற்றி

களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சே லென்றிங் கருளாய் போற்றி
நஞ்சே அமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி

பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி

உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் ஈசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியாய் போற்றி

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமும் இறந்த சுடரே போற்றி

தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
ஆள் ஆனவர்கட்கு அன்பா போற்றி

ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி

தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி

எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி

படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி

செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி

புரம்பல எரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்

**குருநாதர்**

**தவத்திரு. ரெங்கராஜ தேசிக சுவாமிகள் அவர்களின்**

**அருளுரை**

ஓம் அகத்தீசாய நம

மகான் மாணிக்கவாகர் அருளிய சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், போற்றித்திருவகவல் ஆகிய மூன்றும் சன்மார்க்க அன்பர்களுக்காக மனமுவந்து அருளியதாகும். இந்த அருள் பாடல்களை பயபக்தியோடு நித்திய பாராயணம் செய்துவந்தால் முன்செய்த பாவங்கள் நீங்கும், ஜீவகாருண்யம் உண்டாகும். ஜீவகாருண்ய துணைக்கொண்டுதான் ஜென்மத்தைக் கடைத்தேற்றமுடியும்.

எனவே, நமது ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்க அன்பர்களும் தொண்டர்களும் மற்றும் பெரியோர்களும் தாய்மார்களும் இந்த அரிய நூலை பயபக்தியோடு தொட்டு வணங்கி பாராயணம் செய்துவந்தால் மகான் மாணிக்கவாசகர் அருளாசி நமக்குக் கிடைக்கும்.

மகான் மாணிக்கவாசகர் தூலமாகிய புறஉடம்பு பற்றியும், சூட்சுமமாகிய அகஉடம்பு பற்றியும், இரண்டுமற்ற ஜோதி உடம்பு பற்றியும் அறிந்தவர் ஆவார். தம் தேகத்தை அணுவில் அணுவாகவும், அகண்டமாகவும் பரவும் வல்லமை உடையவராவார். பரசிவமாகிய ஆசான் அகத்தீசர் ஆசிபெற்று மும்மலமாகிய பாசதேகத்தை நீத்து, பந்தபாசம் அற்று எவ்வித தடையும் இல்லாமல் கோடானுகோடி யுகம் வாழும் அருள் வள்ளல் மகான் மாணிக்கவாசகர்.

மகான் மாணிக்கவாசகரை ஆசான் அகத்தீசர் நீ மனமுவந்து அருளிய இந்த ஆன்மீக பாடல்களை அன்பர்கள் பாராயணம் செய்யும் காலத்தில் அவர்களுக்கு **நீ அருள்செய்ய வேண்டும்** என்று கட்டளையிட்டுள்ளார். அதன்படி பாராயணம் செய்யும் காலத்தில் மகான் மாணிக்கவாசகர் நமக்கு அருளாசி தருவார்.

எனவே, இந்த அரிய சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி பெறுதற்கரிய மானுடப் பிறவியை உள்ளும், புறமுமாக அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ளவேண்டும்.

ஓம் அகத்தீசாய நம

உ

சிவமயம்

## மகான் திருமூலர் அருளிய

## திருமந்திரம்

## முதல் தந்திரம்

(காரணாகமம்)

## உபதேசம்

விண்ணின்று இழிந்து வினைக்கு ஈடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உள்நின்று உருக்கி ஓர்ஒப்பில்லா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத்தானே 1.

களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பு அறுத்தான் அருள்கண் விழிப்பித்துக்
களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டிப்
பளிங்கில் பவளம் பதித்தான் பதியே 2.

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே 3.

வேயின் எழும்கனல் போலேஇம் மெய்என்னும்
கோயிலில் இருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயா என்னும்
தோயமதாய் எழும் சூரியனாமே 4.

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தம் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதியில் சுடுமாறு போல்
ஆரியன் தோற்ற முன் அற்ற மலங்களே 5.

மலங்களைந் தாமென மாற்றி அருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே 6.

அறிவு ஐம்புலனுடனே நான்றதாகி
நெறி அறியாது உற்ற நீராழும் போல
அறிவு அறிவுள்ளே அழிந்ததுபோல
குறி அறிவிப்பான் குருபரனாமே 7.

ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனி மன்றில் தன்னந் தனிநித்தம்
தீமேவு பலகரணங்களுள் உற்றன
தாமே ஏழ்பிறப்பு எரிசார்ந்த வித்தாமே 8.

வித்தைக் கெடுத்து வியாக்கிரத்தே மிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட்டிருப்பார் சிவயோகியார்களே 9.

சிவயோக மாவது சித்து சித்தென்று
தவயோகத்துள் புக்குத் தன்னொளி தானாய்
அவயோகம் சாராது அவன்பதி போக
நவயோக நந்தி நமக்கு அளித்தானே 10.

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடும் திருத்தாள்
அளித்தான் பேரின்பத்து அருள்வெளிதானே 11.

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே 12.

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்தமுடிவும் தம்முள் கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர் தம்முத்தி முதல் முப்பத்தாறே 13.

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலா ஆனந்தத்து உள்ளொளி புக்குச்
செப்ப அரிய சிவம்கண்டு தான்தெளிந்து
அப்பரிசாக அமர்ந்திருந்தாரே 14.

இருந்தார் சிவமாகி எங்கும் தாமாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத்து இயல்பைக் குறித்து அங்கு
இருந்தார் இழவு வந்தெய்திய சோம்பே 15.

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பதும் சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடம்
சோம்பர் கண்டார் அச்சுருதிக்கண் தூக்கமே 16.

தூங்கிக் கண்டார் சிவலோகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார் சிவயோகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார் சிவபோகமும் தம்உள்ளே
தூங்கிக் கண்டார்நிலை சொல்வது எவ்வாறே 17.

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கு எல்லை
அவ்வாறு அருள் செய்வன் ஆதியரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானில் செய்யக் செழுஞ்சுடர் மாணிக்கமே 18.

மாணிக்கத்துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத்துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடும் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற்றாரே 19.

பெற்றார் உலகில் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகில் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றில் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே 20.

பெருமை சிறுமை அறிந்து எம்பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறிவார் ஆர்
ஒருமையுள் ஆமைபோல் உள்ஐந்து அடக்கி
இருமையும் கேட்டிருந்தார் புரை அற்றே 21.

புரை அற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்
திரை அற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரையற்ற சோதி கலந்த சத்தாமே 22.

சத்த முதல்ஐந்தும் தன்வழித்தான் சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித்து ஆண்டுகொள் அப்பிலே 23.

அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பென பேர்பெற்று உருச்செய்த அவ்வுரு
அப்பினில் கூடி அது ஒன்றாகுமாறு போல்
செப்பினில் சீவன் சிவத்துள் அடங்குமே 24.

அடங்குபேரண்டத்து அணுஅண்டம் சென்றுஅங்கு
இடம்கொண்டது இல்லை இதுவன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே 25.

திருவடியே சிவமாவது தேரில்
திருவடியே சிவலோகம் சிந்திக்கில்
திருவடியே செல்கதியது செப்பில்
திருவடியே தஞ்சம் உள்தெளி வார்க்கே 26.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே 27.

தானே புலன்ஐந்துந் தன்வசமாயிடும்
தானே புலன்ஐந்துந் தன்வசம்போயிடும்
தானே புலன்ஐந்துந் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே 28.

சந்திப்பது நந்திதன் திருத்தாளிணை
சிந்திப்பது நந்தி செய்ய திருமேனி
வந்திப்பது நந்தி நாமம் என்வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே 29.

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில் வைத்துப் புண்ணியராயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே. 30.

சிவமயம்

–

உ

சிவமயம்

**அருட்பெருஞ்சோதி ஆண்டவராகிய இராமலிங்க சுவாமிகள்**

**அருளிய**

# திருவருட்பா

## சுத்தசன்மார்க்க வேண்டுகோள்

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

அருட்பெருஞ்சோதி

**அப்பாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நானன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேல்நிலைமேல் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்.
தப்பேது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே. 1.

**ஐயாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அடிமுடிகண்டு எந்நாளும் அனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
எய்யாத அருட்ஜோதி யென்கையுறல் வேண்டும்
இறந்தவுயிர் தமைமீட்டு எழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணம் உயிர் காத்திடுதல் வேண்டும்
நாயகநின் றனைப்பிரியாது உறுதலும்வேண் டுவனே. 2.

**அண்ணாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணார நினையெங்குங் கண்டு உவத்தல் வேண்டும்
காணாத காட்சியெலாங் கண்டுகொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத்து ஆடியிடல் வேண்டும்
உள்நாடி உயிர்களுறும் துயர்தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியாது உறுகின்ற வுறவதுவேண் டுவனே. 3.

**அத்தாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே யகம்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டும்இங்கே யெழுப்பியில் வேண்டும்
திருச்சபைக்கே யடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்
ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுள ராகியுல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலும் அழியாத வடிவதிலே நானும்
எந்தாயு மொன்றாக இனிதுறல்வேண் டுவனே. 4.

**அரைசேநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகமகிழ்தல் வேண்டும்
வரைசேர்எவ் வுலகமும் ஓர்ஒழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவும்நான் வருவித்தல் வேண்டும்
புரைசேருங் கொலைநெறியும் புலைநெறியும் சிறிதும்
பொருந்தாமல் எவ்வுயிரும் புரிந்துஉவத்தல் வேண்டும்
உரைசேர்மெய்த் திருவடிவில் எந்தாயும் நானும்
ஒன்றாகி யெஞ்ஞான்றும் ஓங்குதல்வேண் டுவனே. 5.

**அடிகேள்நான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அண்டமெல்லாம் பிண்டமெல்லாம் கண்டுகொளல் வேண்டும்
துடிசேர் எவ்உலகமும்எத் தேவரும்எவ் வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டும்
படிவானும் படைத்தல்முதல் ஐந்தொழிலும் ஞானம்
படைத்தல்முதல் ஐந்தொழிலும் நான்புரிதல் வேண்டும்
ஒடியாத திருவடிவில் எந்தாயு நானும்
ஒன்றாகி யெஞ்ஞான்றும் ஓங்குதல்வேண் டுவனே. 6.

**அம்மாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆணவம் ஆதியமுழுதும் அறுத்துநிற்றல் வேண்டும்
இம்மாலைத் தத்துவங்கள் எல்லாம்என் வசத்தே
இயங்கியொரு தீமையும்இல் லாதிருத்தல் வேண்டும்
எம்மாநான் வேண்டுதல்வேண் டாமையறல் வேண்டும்
ஏகசிவ போகம்அனு போகம்உறல் வேண்டும்

தம்மானத் திருவடியில் எந்தாயும் நானும்
சார்ந்துகலந் தோங்குகின்ற தன்மையும்வேண் டுவனே. 7.

**அச்சாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆறந்த நிலைகளெல்லாம் அறிந்தடைதல் வேண்டும்
எச்சார்பு மாகிஉயிர்க் கிதம்புரிதல் வேண்டும்
எனையடுத்தார் தமக்கெல்லாம் இன்புதரல் வேண்டும்
இச்சாதி சமயவிகற் பங்களெல்லாம் தவிர்ந்தே
எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்
உச்சாதி யந்தமிலாத் திருவடிவில் யானும்
உடையாயும் கலந்தோங்கும் ஒருமையும்வேண் டுவனே. 8.

**அறிவாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஐந்தொழில்நான் புரிந்துலகில் அருள்விளக்கல் வேண்டும்
செறியாத கரணமெலாம் செறித்தடக்கல் வேண்டும்
சித்தாந்த வேதாந்தப் பொதுசிறத்தல் வேண்டும்
எறியாதுஎன் னெண்ணமெலாம் இனிதருளல் வேண்டும்
எல்லாஞ்செய் வல்லசித்தே யெனக்களித்தல் வேண்டும்
பிறியாதுஎன் னோடுகலந்து நீயிருத்தல் வேண்டும்
பெருமான்நின் றனைப்பாடி யாடுதல்வேண் டுவனே. 9.

**அருளாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அணுத்துணையும் சினம்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகமெலாம் மருள்நீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாம்ஓர் திருவடிவில் உடையாயும் நானும்
புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்வேண் டுவனே. 10.

**அமலாநான்** வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆடிநிற்கும் சேவடியைப் பாடிநிற்க வேண்டும்
எமனாதித் தடையென்றும் எய்தாமை வேண்டும்
எல்லாஞ்செய் வல்லதிறன் எனக்களித்தல் வேண்டும்

கமையாதி யடைந்துயிர்க ளெல்லாம்சன் மார்க்கம்
காதலித்தே திருப்பொதுவைக் கனித்துஏத்தல் வேண்டும்
விமலாதி யுடையவொரு திருவடிவில் யானும்
விமலாநீ யும்கலந்தே விளங்குதல்வேண் டுவனே. 11.

அருட்பெருஞ்சோதி

– –

உ

சிவமயம்

**மகான் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய**

**கோளறு திருப்பதிகம்**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1.

மூங்கில் போன்ற தோள்களையுடைய உமாதேவியை இடது பாகத்திலே வைத்தவனும், விஷத்தை உண்டு (அதனால்) இருண்ட நீலகண்டனும் ஆகிய சிவபிரான் மிகச் சிறந்த வீணையைத் தடவி, குற்றமில்லாத இளஞ்சந்திரனையும் கங்கையையும் முடியின்மீது தரித்து, அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் சூரியனும், சந்திரனும், அங்காரகனும், புதனும், குருவும், சுக்கிரனும், சனியும், இராகுவும் கேதுவுமாகிய இரு பாம்புகளும் தொண்டர்கட்கு மிகுதியாகவே குற்றமற்றவனாய் நல்லனவாகும், அவை நல்லனவே செய்யும்.

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
        எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்துஎன்
        உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
        உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
        அடியா ரவர்க்கு மிகவே. 2.

எலும்பும் பன்றிக்கோடும் ஆமை ஓடும் ஆகிய இவை திருமார்பில் விளங்கவும், ஊமத்த மலர் மாலையையும் கங்கையையும் முடியிற் சூடியும், உமாதேவியோடும் விடையூர்ந்து எழுந்தருளி வந்து அடியேனது உள்ளத்தில் புகுந்த காரணத்தால் ஒன்பதாவது நாளாகிய ஆயில்யமும், பத்தாம் நாளான மகமும், பதினோராம் நாளாகிய விசாகமும், பதினெட்டாம் நாளாகிய கேட்டையும், ஆறாம் நாளாகிய திருவாதிரையும் ஆகிய இவையோடு வைத்து எண்ணப்படும் பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராட்டம், பூரட்டாதி எனப்படும் இந்நாட்களனைத்தும் அடியார்களுக்கு மிகவும் அன்புடன் நல்லன, அவை நல்லனவே செய்யும்.

உருவளர் பவள மேனி ஒளி நீ றணிந்து
        உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
        உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி சயமாது பூமி
        திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
        அடியா ரவர்க்கு மிகவே. 3.

அழகு மிகுகின்ற பவளம் போன்ற சிவந்த திருமேனியில் திருவெண்ணீற்றை அணிந்து, மணங்கமழ்ந்து அலர்கின்ற கொன்றை மாலையையும் பிறையினையும் முடியிற் சூடி வெள்விடை மேல் உமையம்மையாருடன் அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய

காரணத்தால் பொன்மகளும், நாமகளும், கொற்றவையும், பூமகளும், திசைகாப்பாளருமாகிய பல தெய்வங்களும் திருத்தொண்டர்களுக்கு மிகவும் அரிய முறை உடையன என்றாலும் நல்லன, அவை நல்லனவே செய்யும்.

மதிநுதல் மங்கை யோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4.

பிறை போலும் நெற்றியையுடைய உமையம்மையோடு வடதிசையில் இருந்து வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளுகின்ற எங்கள் சிவபெருமான், கங்கா நதியோடு கொன்றை மாலையைத் திருமுடியிற் சூடி, அடியேன் உள்ளத்தில் புகுந்த காரணத்தால், கோபிக்கும் காலனும், தீயும், நமனும், இயமதூதர்களும், கொடிய நோய்களும் ஆகிய இவை எல்லாம் தொண்டர்களுக்கு மிகவும் நன்மை செய்யக்கூடியனவாம்.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடைஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5.

விஷத்தை அணிந்த திருநீலகண்டத்தை உடையவரும், எமது தந்தையும், உமாதேவியோடு ஆனேற்றை ஊர்ந்தருளுகின்ற அடியார்களது பரமனுமாகிய சிவபிரான், மிக்க கருநிறம் உடைய

வன்னியையும் கொன்றை மலரையும் முடியில் தரித்து அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் கொடிய சினமுடைய அசுரரோடும், அச்சத்தை உண்டாக்கும் இடியும், மின்னலும், மிகுதியான பூதங்களும் தொண்டர்களுக்கு மிகவும் பயப்படுந்தன்மை உடையவனவாய் நல்லனவாகும், அவை நல்லனவே செய்யும்.

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6.

ஒளியையும் கோடுகளையும் உடைய புலித்தோலாடையாகிய கட்டின கோவணத்தையுடைய இறைவர், அன்றலர்ந்த மலர்களையும் வன்னியையும், கொன்றை மாலையையும், கங்கையையும் திருமுடியில் சூடி உமாதேவியாருடன் எழுந்தருளி வந்து அடியேனுள்ளத்தில் புகுந்த காரணத்தினால் கொலைத் தொழிலையுடைய சிங்கம், புலி, யானை, பன்றி, பாம்பு, கரடி, மனிதக் குரங்கு ஆகிய இவையாவும் தொண்டர்களுக்கு மிகுதியும் நல்லன, அவை நல்லனவே செய்யும்.

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7.

புகழ்ந்து பேசக்கூடிய இளமையான தனங்களையுடைய உமாதேவியார் ஒரு பக்கத்தில் அமர, இடபத்தை ஊர்ந்தருளுகின்ற

செல்வராகிய இறைவர், தம்மை வந்து அடைந்தவர்களான திங்களையும், கங்கையும் முடியில் தரித்து, அடியேனுடைய உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால், வெப்பம், குளிர்ச்சி, வாதம், பித்தம் மற்றுமுள்ள தீவினைகளும் தொண்டர்களுக்கு அதிகமாக வந்து வருத்தாத அவ்விதத்தில் நல்லனவாம், அவை நல்லனவே செய்யும்.

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வான்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8.

மன்மதன் பட்டொழியும்படி அந்நாளில் விழித்து நோக்கி, உமாதேவியாரோடும் கூடினவராய், சந்திரனையும் வன்னியையும் கொன்றை மலரையும் சிரசில் தரித்து, எருதின்மேல் எழுந்தருளி வந்து அடியேனது உள்ளத்தில் புகுந்த காரணத்தால் ஏழு கடல்களும் சூழ்ந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணனோடு ஆழ்ந்த கடல்களும், பிற துன்பங்களும் நெருங்கி வருத்தாது தொண்டர்களுக்கு மிகவும் நல்லன, அவை நல்லனவே செய்யும்.

பலபலவேட மாகும் பரன்நாரி பாகன்
பசுஏறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9.

பலபலவான திருவுருவங்களோடு கூடிய பரமரும், பெண்ணொரு பாகரும், விடையை ஊர்கின்ற அடியோர்களது மேலோனுமாகிய இறைவர், கங்கையோடு எருக்க மலரையும் திருமுடியில் தரித்து அடியேனது உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் நான்முகனும், திருமாலும், வேதங்களும், தேவர்களும், சுழன்று வரும் காலமும், கடலும், மலையும் ஆகிய இவை எல்லாமும் தொண்டர்களுக்கு அதிகமாக நல்லனவாம், அவை நல்லனவே செய்யும்.

கொத்தலர் குழலி யோடும் விசயற்கு நல்கு
        குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
        உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
        திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
        அடியா ரவர்க்கு மிகவே. 10.

பூங்கொத்துக்கள் பரந்த கூந்தலையுடைய உமாதேவியாரோடு அருச்சுனனுக்கு அருள்செய்த வேடராகிய இறைவர், ஊமத்த மலரையும், சந்திரனையும், பாம்பையும் திருமுடியில் தரித்து அடியேன் உள்ளத்தில் எழுந்தருளிய காரணத்தால் இறைவனது திருவெண்ணீறு, புத்தர்களையும் சமணர்களையும் வாதத்தில் தோற்கடித்துக் கெடும்படி செய்யும், இது, உண்மையும் உறுதியும் ஆம். அந்தத் தகுதியினால் தொண்டர்கட்கு மிகுதியாகவே அவர்களால் வரும் தீயன யாவும் நல்லன, அவை நல்லனவே செய்யும்.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
        வளர்செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதி யாய பிரமா புரத்து
        மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
        நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
        அரசாள்வர் ஆணை நமதே. 11.

தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகளும், கரும்பின் ஆலைகளும், செந்நெற்பயிர்களும் நிறைந்து இந்த வளப்பங்களால் மிகுந்த பொன்வளம் எங்கும் சிறக்கும், நான்முகன் முதற்கண் பூசித்து வழிபட்ட பிரமாபுரம் என்னும் சீகாழிப் பதியில் அவதரித்து வைதிக ஞானத்தையுடைய திருஞானசம்பந்தன், கோள்களும் நாள்களும் தொண்டர்களை வருத்தாதவாறு உரைத்த சொல் மாலையாகிய திருப்பதிகத்தை ஓதுகின்ற அடியார்கள் மேலுலகத்தில் அரசராக ஆளக்கடவர். இது நமது ஆணையாகும்.

திருச்சிற்றம்பலம்

– –

உ

சிவமயம்

## அணுவினுள் அணுவைக்கண்ட ஔவையார் அருளிய
## விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயா பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றில் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

சிவமயம்

உ

திருச்சிற்றம்பலம்

**அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய**

## அருட்பெருஞ்ஜோதி அகவல்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்சிவ நெறிசார் அருட்பெரு நிலைவாழ்
அருட்சிவ பதியாம் அருட்பெருஞ்ஜோதி
ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின்று ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
இகநிலைப் பொருளாய்ப் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி
ஈனம்இன் றிகபரத்து இரண்டின்மேற் பொருளாய்
ஆனலின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி

உரைமனங் கடந்த ஒருபெரு வெளிமேல்
அரைசு செய்துஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊக்கமும் உணர்ச்சியும் ஒளிதரும் ஆக்கையும்
ஆக்கமும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
எல்லையில் பிறப்பெனும் இருங்கடல் கடத்திஎன்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
ஏறா நிலைமிசை ஏற்றி என்றனக்கே
ஆறாறு காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஐயமும் திரிபும் அறுத்து எனது உடம்பினுள்
ஐயமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி

ஒன்றென இரண்டென ஒன்றிரண்டென இவை
அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோதி
ஓதாது உணர்ந்திட ஒளிஅளித்து எனக்கே
ஆதாரமாகிய அருட்பெருஞ்ஜோதி
ஔவியம் ஆதிஓர் ஆறுந் தவிர்த்தபேர்
அவ்வியல் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி
திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும் ஓர்
அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி
சுத்த சன்மார்க்க சுகத்தனி வெளி எனும்
அத்தகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

சுத்த மெய்ஞ்ஞானசுகோதய வெளிஎனும்
அத்து விதச்சபை அருட்பெருஞ்ஜோதி
தூய கலாந்தசுகந்தரு வெளிஎனும்
ஆய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஞானயோகாந்த நடத்திரு வெளிஎனும்
ஆனியில் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
விமலபோதாந்தமா மெய்ப்பொருள் வெளிஎனும்
அமல சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
பெரிய நாதாந்தப் பெருநிலை வெளிஎனும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி

சுத்த வேதாந்தத் துரியல்மேல் வெளிஎனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுத்த சித்தாந்த சுகப்பெரு வெளிஎனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
தகரமெய்ஞ் ஞானத் தனிப்பெரு வெளி எனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ்ஜோதி
தத்துவா தீதத் தனிப்பொருள் வெளிஎனும்
அத்திரு அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
சச்சிதானந்தத் தனிப்பர வெளிஎனும்
அச்சியல் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி

சாகாக் கலை நிலை தழைத்திடு வெளிஎனும்
ஆகாயத் தொளிர் அருட்பெருஞ்ஜோதி
காரண காரியங் காட்டிடு வெளி எனும்
ஆரணச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஏகம் அனேகம் எனப்பகர் வெளி எனும்
ஆகமச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
வேதாகமங்களின் விளைவுகட்கு எல்லாம்
ஆதாரமாம் சபை அருட்பெருஞ்ஜோதி
என்றாதிய சுடர்க்கு இயல்நிலையாய் அது
அன்றாம் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி

சமயம் கடந்த தனிப்பொருள் வெளியாய்
அமையும் திருச்சபை அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர்களும் ஒளி முயங்குற அளித்தருள்
அச்சுடராம் சபை அருட்பெருஞ்ஜோதி
துரியமுங் கடந்த சுகபூரணந்தரும்
அரிய சிற்றம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எவ்வகைச் சுகங்களும் இனிதுற அளித்தருள்
அவ்வகைச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
இயற்கை உண்மையதாய் இயற்கையின்பமுமாம்
அயர்ப்பிலாச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி

சாக்கிரா தீதத் தனிவெளியாய் நிறைவு
ஆக்கிய சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
சுட்டுதற்கு அரிதாம் சுகாதீத வெளி எனும்
அட்டமேற் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
நவந்தவிர் நிலைகளும் நண்ணும் ஓர்நிலையாய்
அவந்தவிர் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
உபய பக்கங்களும் ஒன்றெனக் காட்டிய
அபய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
சேகர மாம்பல சித்திநிலைக்கு எலாம்
ஆகர மாம்சபை அருட்பெருஞ்ஜோதி

மனாதிகட்கு அரிய மதாதீத வெளியாம்
அனாதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
ஓதிநின்று உணர்ந்துணர்ந்து உணர்தற்கு அரிதாம்
ஆதி சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
வாரமும் அழியா வரமும் தருந்திரு
ஆரமு தாம்சபை அருட்பெருஞ்ஜோதி
இழியாப் பெருநலம் எல்லாம் அளித்தருள்
அழியாப் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
கற்பம் பலபல கழியினும் அழிவுறா
அற்புதம் தரும்சபை அருட்பெருஞ்ஜோதி

எனைத்தும் துன்புஇலா இயலளித்து எண்ணிய
அனைத்தும் தருஞ்சபை அருட்பெருஞ்ஜோதி
பாணிப் பிலதாய்ப் பரவினோர்க்கு அருள்புரி
ஆணிப்பொன் அம்பலத்து அருட்பெருஞ்ஜோதி
எம்பலம் எனத்தொழுது ஏத்தினோர்க்கு அருள்புரி
அம்பலத்து ஆடல்செய் அருட்பெருஞ்ஜோதி
தம்பர ஞான சிதம்பர எனும்ஓர்
அம்பரத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
எச்சபை பொதுஎன இயம்பினர் அறிஞர்கள்
அச்சபை இடங்கொளும் அருட்பெருஞ்ஜோதி

வாடுதல் நீக்கிய மணிமன்று இடையே
ஆடுதல் வல்ல அருட்பெருஞ்ஜோதி
நாடகத் திருச்செயல் நவிற்றிடும் ஒருபேர்
ஆடகப் பொது ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
கற்பனை முழுவதும் கடந்து ஒளிதரும் ஓர்
அற்புதச் சிற்சபை அருட்பெருஞ்ஜோதி
ஈன்ற நற்றாயினும் இனிய பெருந்தயவு
ஆன்ற சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி
இன்புறுநானுளத் தெண்ணியாங்கு எண்ணியாங்கு
அன்புறத் தருசபை அருட்பெருஞ்ஜோதி

எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது
        அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ்ஜோதி
பிறிவுற்று அறியாப் பெரும்பொரு ளாய்என்
        அறிவுக்கு அறிவாம் அருட்பெருஞ்ஜோதி
சாதியும் மதமும் சமயமும் காணா
        ஆதி அநாதியாம் அருட்பெருஞ்ஜோதி
தனுகர ணாதிகள் தாம்கடந்து அறியும் ஓர்
        அனுபவம் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
உனும் உணர்வு உணர்வாய் உணர்வெலாம் கடந்த
        அனுபவா தீத அருட்பெருஞ்ஜோதி

பொதுவுணர்வு உணரும் போது அலால் பிரித்தே
        அதுஎனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி
உளவினில் அறிந்தால் ஒழியமற்று அளக்கின்
        அளவினல் அளவா அருட்பெருஞ்ஜோதி
என்னையும் பணிகொண்டு இறவாவரம் அளித்து
        அன்னையில் உவந்த அருட்பெருஞ்ஜோதி
ஓதி ஓதாமல் உறவு எனக்கு அளித்த
        ஆதியீறு இல்லா அருட்பெருஞ்ஜோதி
படிஅடி வான்முடி பற்றினும் தோற்றா
        அடிமுடி எனும் ஓர் அருட்பெருஞ்ஜோதி

பவனத்தின் அண்டப் பரப்பின் எங்கெங்கும்
        அவனுக்கு அவனாம் அருட்பெருஞ்ஜோதி
திவள் உற்ற அண்டத் திரளின் எங்கெங்கும்
        அவளுக்கு அவளாம் அருட்பெருஞ்ஜோதி
மதன் உற்ற அண்ட வரைப்பின் எங்கெங்கும்
        அதனுக்கு அதுவாம் அருட்பெருஞ்ஜோதி
எப்பாலுமாய் வெளிஎல்லாம் கடந்துமேல்
        அப்பாலும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
வல்லதாய் எல்லாம் ஆகிஎல்லாமும்
        அல்லதாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதி

எப்பொருள் மெய்ப்பொருள் என்பர்மெய்கண்டோர்
அப்பொருள் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
தாங்கு அகிலாண்ட சராசர நிலைநின்று
ஆங்குற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
சத்தர்கள் எல்லாம் தழைத்திட அகம்புறத்து
அத்திசை விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
சத்திகள் எல்லாம் தழைக்க எங்கெங்கும்
அத்தகை விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
முந்துறும் ஐந்தொழில் மூர்த்திகள் பலர்க்கும்
ஐந்தொழில் அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி

பெரிதினும் பெரிதாய் சிறிதினும் சிறிதாய்
அரிதினும் அரிதாம் அருட்பெருஞ்ஜோதி
காட்சியும் காணாக் காட்சியும் அதுதரும்
ஆட்சியும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
இன்புறு சித்திகள் எல்லாம் புரிகவென்று
அன்புடன் எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி
இறவா வரம் அளித்து என்னை மேல் ஏற்றிய
அறவாழியாம் தனி அருட்பெருஞ்ஜோதி
நான் அந்தம் இல்லா நலம்பெற எனக்கே
ஆனந்தம் நல்கிய அருட்பெருஞ்ஜோதி

எண்ணிய எண்ணியாங்கு இயற்றுக என்று எனை
அண்ணி உள்ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
மேயினை மெய்ப்பொருள் விளங்கினைநீ அது
ஆயினை என்று அருள் அருட்பெருஞ்ஜோதி
எண்ணிற் செழுந்தேன் இனியதெள்ளமுதுஎன
அண்ணித்து இனிக்கும் அருட்பெருஞ்ஜோதி
சிந்தையில் துன்பொழி சிவம்பெறுக எனத் தொழில்
ஐந்தையும் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
எங்கெங்கு இருந்து உயிர் ஏதெது வேண்டினும்
அங்கங்கிருந்து அருள் அருட்பெருஞ்ஜோதி

சகமுதல் புறப்புறம் தங்கிய அகப்புறம்
அகம்புறம் முற்றுமாம் அருட்பெருஞ்ஜோதி
சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
உபரச வேதியின் உபயமும் பரமும்
அபரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி
மந்தணம் இதுஎன மறுஇலா மதியால்
அந்தணர் வழுத்தும் அருட்பெருஞ்ஜோதி
எம்புயக்கனி என எண்ணுவார் இதய
அம்புயத்து அமர்ந்த அருட்பெருஞ்ஜோதி

செடியறுத் தேதிட தேகமும் போகமும்
அடியருக் கேதரும் அருட்பெருஞ்ஜோதி
துன்பு அறுத்துஒரு சிவதுரிய சுகந்தனை
அன்பருக்கே தரும் அருட்பெருஞ்ஜோதி
பொதுவது சிறப்பது புதியது பழையது என்று
அதுவது வாய்த்திகழ் அருட்பெருஞ்ஜோதி
சேதனப் பெருநிலை திகழ்தரும் ஒருபரை
ஆதனத்து ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
ஓமயத் திருஉரு உவப்புடன் அளித்து எனக்கு
ஆமயத் தடைதவிர் அருட்பெருஞ்ஜோதி

எப்படி எண்ணியது என்கருத்து இங்கு எனக்கு
அப்படி அருளிய அருட்பெருஞ்ஜோதி
எத்தகை விழைந்தன என்மனம் இங்கு எனக்கு
அத்தகை அருளிய அருட்பெருஞ்ஜோதி
இங்குறத் திரிந்து உளம் இளையா வகை எனக்கு
அங்கையில் கனியாம் அருட்பெருஞ்ஜோதி
பார்உயப் புரிகெனப் பணித்து எனக்கு அருளிஎன்
ஆருயிர்க்குள் ஒளிர் அருட்பெருஞ்ஜோதி
தேவிஉற்று ஒளிர்தரு திருஉருஉடன் எனது
ஆவியில் கலந்து ஒளிர் அருட்பெருஞ்ஜோதி

எவ்வழி மெய்வழி என்பவே தாகமம்
அவ்வழி எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி
வையமும் வானமும் வாழ்த்திட எனக்கருள்
ஐயறிவு அளித்த அருட்பெருஞ்ஜோதி
சாமாறு அனைத்தும் தவிர்த்து இங்கு எனக்கே
ஆமாறு அருளிய அருட்பெருஞ்ஜோதி
சத்தியமாம் சிவ சத்தியை ஈந்து எனக்கு
அத்திறல் வளர்க்கும் அருட்பெருஞ்ஜோதி
சாவா நிலை இது தந்தனம் உனக்கே
ஆவா என அருள் அருட்பெருஞ்ஜோதி

சாதியும் மதமும் சமயமும் பொய் என
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி
மயர்ந்திடேல் சிறிதும் மனம் தளர்ந்து அஞ்சேல்
அயர்ந்திடேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
தேசுறத் திகழ்தரு திருநெறிப் பொருள் இயல்
ஆசறத்தெரித்த அருட்பெருஞ்ஜோதி
காட்டிய உலகெலாம் கருணையால் சித்தியின்
ஆட்டியல் புரியும் அருட்பெருஞ்ஜோதி
எங்குலம் எம்இனம் என்ப தொண்ணூற்றாறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி

எம்மதம் எம்இறை என்ப உயிர்த்திரள்
அம்மதம் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
கூறிய கருநிலை குலவிய கீழ்மேல்
ஆறியல் எனஉரை அருட்பெருஞ்ஜோதி
எண்தர முடியாது இலங்கிய பற்பல
அண்டமும் நிறைந்தொளிர் அருட்பெருஞ்ஜோதி
சார் உயிர்க்கு எல்லாம் தாரக மாம்பரை
ஆருயிர்க்கு உயிராம் அருட்பெருஞ்ஜோதி
வாழி நீடுழி வாழியென்று ஓங்குபேர்
ஆழியை அளித்த அருட்பெருஞ்ஜோதி

மாய்ந்தவர் மீட்டும் வருநெறி தந்துஇதை
ஆய்ந்திடு என்றுரைத்த அருட்பெருஞ்ஜோதி
எச்சம் நினக்கிலை எல்லாம் பெறுக என்று
அச்சம் தவிர்த்த என் அருட்பெருஞ்ஜோதி
நீடுக நீயே நீள்உலகு அனைத்தும் நின்று
ஆடுக என்ற என் அருட்பெருஞ்ஜோதி
முத்திறல் வடிவமும் முன்னிஆங்கு எய்துறும்
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி

கருமசித்திகளின் கலைபல கோடியும்
அரசுற எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
யோகசித்திகள் வகை உறுபல கோடியும்
ஆக என்று எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
ஞான சித்தியின் வகை நல்விரிவு அனைத்தும்
ஆனி இன்று எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
புடைஉறு சித்தியின் பொருட்டே முத்தியை
அடைவது என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
முத்தி என்பது நிலைமுன் உறுசாதனம்
அத்தகவு என்றஎன் அருட்பெருஞ்ஜோதி

சித்தி என்பதுநிலை சேர்ந்த அநுபவம்
அத்திறல் என்ற என் அருட்பெருஞ்ஜோதி
ஏகசிற் சித்தியே இயல்உற அனேகம்
ஆகியது என்ற என் அருட்பெருஞ்ஜோதி
இன்பசித்தியின் இயல்ஏகம் அனேகம்
அன்பருக்கு என்ற என் அருட்பெருஞ்ஜோதி
எட்டு இரண்டு என்பன இயலும் முற்படியென
அட்டநின்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
இப்படி கண்டனை இனி உறுபடி எலாம்
அப்படியே எனும் அருட்பெருஞ்ஜோதி

படிமுடி கடந்தனை பார் இதுபார் என
அடிமுடி காட்டிய அருட்பெருஞ்ஜோதி
ஜோதியுள் ஜோதியின் சொருபமே அந்தம்
ஆதி என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
இந்த சிற்ஜோதியின் இயல்உறு ஆதி
அந்தம் என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
ஆதியும் அந்தமும் அறிந்தனை நீயே
ஆதி என்று அருளிய அருட்பெருஞ்ஜோதி
நல்லமுது என் ஒருநா உளம் காட்டி என்
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி

கற்பகம் என் உளங் கைதனில் கொடுத்தே
அற்புதம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
கதிர்நலம் என் இரு கண்களில் கொடுத்தே
அதிசயம் இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
அருள் ஒளி என்தனி அறிவினில் விரித்தே
அருள்நெறி விளக்கெனும் அருட்பெருஞ்ஜோதி
பரை ஒளி என்மனப் பதியினில் விரித்தே
அரசது இயற்றெனும் அருட்பெருஞ்ஜோதி
வல்லப சத்திகள் வகை எல்லாம் அளித்து எனது
அல்லலை நீக்கிய அருட்பெருஞ்ஜோதி

ஆரியல் அகம்புறம் அகப்புறம் புறப்புறம்
ஆரமுது எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
சூரிய சந்திர ஜோதியுள் ஜோதி என்று
ஆரியர் புகழ்தரும் அருட்பெருஞ்ஜோதி
பிறிவேது இனி உனைப் பிடித்தனம் உனக்குநம்
அறிவே வடிவெனும் அருட்பெருஞ்ஜோதி
எஞ்சேல் உலகினில் யாதொன்று பற்றியும்
அஞ்சேல் என்றருள் அருட்பெருஞ்ஜோதி
மாண்டு உழலாவகை வந்து இளங்காலையே
ஆண்டுகொண்டருளிய அருட்பெருஞ்ஜோதி

பற்றுகள் அனைத்தையும் பற்றறத் தவிர்த்து எனது
அற்றமும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
சமயம் குலமுதல் சார்பெலாம் விடுத்த
அமயம் தோன்றிய அருட்பெருஞ்ஜோதி
வாய்தற்கு உரித்தெனும் மறை ஆகமங்களால்
ஆய்தற்கு அரிய அருட்பெருஞ்ஜோதி
எல்லாம் வல்லசித்தெனக்கு அளித்து எனக்கு உனை
அல்லாது இலையெனும் அருட்பெருஞ்ஜோதி
நவைஇலா உளத்தில் நாடிய நாடிய
அவைஎலாம் அளிக்கும் அருட்பெருஞ்ஜோதி

கூற்றுதைத்து என்பால் குற்றமுங் குணங்கொண்டு
ஆற்றல்மிக் களித்த அருட்பெருஞ்ஜோதி
நன்று அறிவு அறியா நாயினேன் தனையும்
அன்று வந்து ஆண்ட அருட்பெருஞ்ஜோதி
நாயினும் கடையேன் ஈயினும் இழிந்தேன்
ஆயினும் அருளிய அருட்பெருஞ்ஜோதி
தோத்திரம் புகலேன் பாத்திரம் அல்லேன்
ஆத்திரம் அளித்த அருட்பெருஞ்ஜோதி
எச்சோ தனைகளும் இயற்றாது எனக்கே
அச்சோ என்றருள் அருட்பெருஞ்ஜோதி

ஏறாநிலைநடு ஏற்றி என்றனை ஈண்டு
ஆறாறு கடத்திய அருட்பெருஞ்ஜோதி
தாபத்துயரம் தவிர்த்து உலகுஉறும் எலா
ஆபத்தும் நீக்கிய அருட்பெருஞ்ஜோதி
மருட்பகை தவிர்த்துஎனை வாழ்வித்து எனக்கே
அருட்குரு ஆகிய அருட்பெருஞ்ஜோதி
உருவமும் அருவமும் உபயமும் ஆகிய
அருள்நிலை தெரித்த அருட்பெருஞ்ஜோதி
இருளறுத்து என்உளத்து எண்ணியாங்கு அருளி
அருள்அமுது அளித்த அருட்பெருஞ்ஜோதி

தெருள்நிலை இது எனத்தெருட்டி என்னுளத்திருந்து
அருள்நிலை காட்டிய அருட்பெருஞ்ஜோதி
பொருட்பதம் எல்லாம் புரிந்துமேல் ஓங்கிய
அருட்பதம் அளித்த அருட்பெருஞ்ஜோதி
உருள்சகடு ஆகிய உளஞ்சலி யாவகை
அருள்வழி நிறுத்திய அருட்பெருஞ்ஜோதி
வெருள்மன மாயை வினைஇருள் நீக்கிஉள்
அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ்ஜோதி
சுருள்விரி வுடைமனச் சுழல் எலாம் அறுத்தே
அருள்ஒளி நிரப்பிய அருட்பெருஞ்ஜோதி

விருப்போடு இகழ்உறு வெறுப்பும் தவிர்த்தே
அருட்பேறு அளித்த அருட்பெருஞ்ஜோதி
அருட்பேர் தரித்து உலகனைத்தும் மலர்ந்திட
அருட்சீர் அளித்த அருட்பெருஞ்ஜோதி
உலகெலாம் பரவஎன் உள்ளத்து இருந்தே
அலகிலா ஒளிசெய் அருட்பெருஞ்ஜோதி

### 1. ஐம்பூத இயல்வகை

விண்ணினுள் விண்ணாய் விண்நடு விண்ணாய்
அண்ணி நிறைந்த அருட்பெருஞ்ஜோதி
விண்உறு விண்ணாய் விண்நிலை விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

காற்றினுள் காற்றாய்க் காற்றிடைக் காற்றாய்
ஆற்றலின் ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி
காற்றுறு காற்றாய்க் கால்நிலைக் காற்றாய்
ஆற்ற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
அனலினுள் அனலாய் அனல்நடு அனலாய்
அனல்உற விளங்கும் அருட்பெருஞ்ஜோதி
அனல்உறும் அனலாய் அனல்நிலை அனலாய்
அனல்உற வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
புனலினுள் புனலாய்ப் புனலிடைப் புலனாய்
அனை என வயங்கும் அருட்பெருஞ்ஜோதி

புனலுறு புனலாய்ப் புனல் நிலைப் புனலாய்
அனை எனப் பெருகும் அருட்பெருஞ்ஜோதி
புவியின் உட்புவியாய் புவி நடுப் புவியாய்
அவைதர வயங்கும் அருட்பெருஞ்ஜோதி
புவிஉறு புவியாய்ப் புவிநிலைப் புவியாய்
அவைகொள விரிந்த அருட்பெருஞ்ஜோதி
விண்நிலை சிவத்தின் வியன்நிலை அளவி
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வளிநிலை சத்தியின் வளர்நிலை அளவி
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

நெருப்பது நிலைநடுநிலை எலாம் அளவி
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்நிலை திரைவளர் நிலைதனை அளவி
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புவிநிலை சுத்தமாம் பொற்பதி அளவி
அவை உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

## 2. மண்ணியல் விரி

மண்ணினில் திண்மையை வகுத்து அதில்கிடக்கை
அன்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பொன்மை வகுத்து அதில்ஐமையை
அன்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

மண்ணினில் ஐம்பூவகுத்து அதில் ஐந்திறம்
அன்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் நாற்றம் வகுத்து அதில் பல்வகை
அன்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பற்பல வகைகருநிலை இயல்
அன்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் ஐந்தியல் வகுத்து அதில்பல்பயன்
அன்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணிடை அடிநிலை வகுத்து அதில் பன்னிலை
அன்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

மண்ணினில் ஐந்தைந்துவகையும் கலந்துகொண்டு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்இயற் சத்திகள் மண்செயற் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்உருச் சத்திகள் மண்கலைச் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ஒளிச் சத்திகள் மண்கருச் சத்திகள்
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மண்கணச் சத்திகள் வகைபல பலவும்
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி 390.

மண்நிலைச் சத்தர்கள் வகைபல பலவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்கரு உயிர்த்தொகை வகைவிரி பலவா
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் பொருள்பல வகைவிரி வெவ்வேறு
அண்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்உறு நிலைபல வகுத்து அதில்செயல்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணிடைப் பக்குவம் வகுத்து அதில்பயன்பல
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி 400.

மண்இயல் பலபல வகுத்து அதில்பிறவும்
அண்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

### 3. நீரியல் விரி

நீரினில் தண்மையும் நிகழ்ஊ ரொழுக்கமும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் பசுமையை நிறுத்தி அதில்பல
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடைப் பூவியல் நிகழ்உறு திறவியல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரினில் சுவைநிலை நிரைத்து அதில் பல்வகை
ஆர்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி 410.

நீரினில் கருநிலை நிகழ்த்திய பற்பல
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை நான்குஇயல் நிலவுவித்து அதில்பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை அடிநடு நிலை உறவகுத்து அனல்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை ஒளிஇயல் நிகழ்பல குணஇயல்
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி

நீரினில் சத்தர்கள் நிறைவகை உறைவகை
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை உயிர்பல நிகழ்உறு பொருள்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீரிடை நிலைபல நிலைஉறு செயல்பல
ஆர்கொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்உறு பக்குவ நிறைவுறு பயன்பல
ஆர்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்இயல் பலபல நிறைத்து அதில் பிறவும்
ஆர்தரப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

### 4. தீயியல் விரி

தீயினில் சூட்டியல் சேர்தரச்செலவு இயல்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயினில் வெண்மைத் திகழ்இயல் பலவா
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை பூஎலாம் திகழ்உறு திறம் எலாம்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை ஒளியே திகழ் உற அமைத்து அதில்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

தீயிடை மூவியல் செறிவித்து அதில்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை நடுநிலை திகழ்நடு நடுநிலை
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைப் பெருந்திரல் சித்திகள் பலபல
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைச் சித்துகள் செப்புறும் அனைத்தும்
ஆய்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி

தீயிடை உயிர்பல திகழ்உறு பொருள்பல
ஆய்வகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை நிலைபல திகழ்செயல் பலபயன்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயினில் பக்குவம் சேர்குணம் இயல்குணம்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடை உருக்கியல் சிறப்பியல் பொதுஇயல்
ஆய்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தீஇயல் பலபல செறித்து அதில்பலவும்
ஆய்உறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி

## 5. காற்றியல் விரி

காற்றிடை அசை இயல் கலை இயல் உயிர் இயல்
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைப்பூ இயல் கருதுறு திறவியல்
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் ஊறியல் காட்டுறு பலபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் பெருநிலை கருநிலை அளவில
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை ஈரியல் காட்டி அதில்பல
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

காற்றினில் இடைநடு கடைநடு அகம்புறம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் சத்தர்கள் கணிதம் கடந்தன
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை உயிர்பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி

காற்றிடை நானிலைக் கருவிகள் அனைத்தையும்
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடை உணரியல் கருதியல் ஆகிய
ஆற்றுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் செயல் எலாம் கருதிய பயன் எலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் பக்குவக் கதியெலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றினில் காலம் கருதுறு வகைஎலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

காற்றியல் பலபல கணித்து அதில்பிறவும்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி

## 6. வெளி இயல் விரி

வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைப் பூஎலாம் வியப்புறு திறன்எலாம்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியினில் ஒலிநிறை வியன்நிலை அனைத்தும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை
அளிகொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி

வெளியிடை முடிநிலை விளங்குற வகுத்தே
அளிபெற விளக்கும் அருட்பெருஞ்ஜோதி
வெளியினில் சத்திகள் வியப்புற சத்தர்கள்
அளிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை ஒன்றே விரித்து அதில் பற்பல
அளிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடைபலவே விரித்து அதில் பற்பல
அளிதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வெளியிடை உயிர்இயல் வித்தியல் சித்தியல்
அளிபெற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

வெளியின் அனைத்தையும் விரித்து அதில் பிறவும்
அளிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

## 7. அகப்புற விரி

புறநடு வொடுகடை புணர்ப்பித்து ஒருமுதல்
அறம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறந்தலை நடுவொடு புணர்ப்பித்து ஒரு கடை
அறம்பெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புற நடுக்கடை அணைவால் புறமுதல்
அகப்பட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புற நடுமுதல் அணைவால் புறக்கடை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி

கருது அக நடுவொடு கடை அணைந்து அகமுதல்
அருள்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
தனிஅக நடுவொடு தலைஅணைந்து அகக்கடை
அணிஉற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகநடு புறக்கடை அணைந்து அகப்புறமுதல்
அகம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகநடு புறத்தலை அணைந்து அகப்புறக்கடை
அகலிடை வகுத்த அருட்பெஞ்ஜோதி
அகநடு அதனால் அகப்புற நடுவை
அகம்அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

அகப்புற நடுவால் அணிபுற நடுவை
அகப்பட அமைத்த அருட்பெருஞ்ஜோதி
புறநடு அதனால் புறப்புற நடுவை
அறம்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புகல் அரும் அகண்ட பூரண நடுவால்
அகநடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்புறக் கடைமுதல் புணர்ப்பால் புறப்புற
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறத்தியல் கடைமுதல் புணர்ப்பால் புறந்துறும்
அறக்கணம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி 540.

அகப்புறக் கடைமுதல் அணைவால் அகக்கணம்
அகத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகக்கடை முதல் புணர்ப்பு அதனால் அக்கணம்
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

### 8. ஐம்பூதக் கலப்பின் விரி

வானிடைக் காற்றும் காற்றிடை நெருப்பும்
ஆனற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நெருப்பிடை நீரும் நீரிடைப் புவியும்
அருப்பிட வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நீர்மேல் நெருப்பும் நெருப்பின்மேல் உயிர்ப்பும்
ஆர்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 550.

புனல்மேல் புவியும் புவிமேல் புடைப்பும்
அனல்மேல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பகுதிவான் வெளியில் படர்ந்தமா பூத
அகல்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி

### 9. வெளி வகை விரி

உயிர்வெளி இடையே உரைக்கரும் பகுதி
அயவெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உயிர்வெளி அதனை உணர்கலை வெளியில்

அயல்அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கலைவெளி அதனைச் கலப்பறு சுத்த
அலர்வெளி வகுத்த அருட்பெருஞ்ஜோதி

சுத்தநல் வெளியைத் துரிசறு பரவெளி
அத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரவெளி அதனைப் பரம்பர வெளியில்
அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரம்பரவெளியைப் பராபரா வெளியில்
அரந்தெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரம்பரவெளியைப் பகர்பெரு வெளியில்
அராவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெருவெளி அதனைப் பெருஞ்சுக வெளியில்
அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

குணமுதல் கருவிகள் கூடிய பகுதியில்
அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மனமுதல் கருவிகள் மன்உயிர் வெளியிடை
அன்புற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காலமே முதலிய கருவிகள் கலைவெளி
ஆலுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
துரிசறு கருவிகள் சுத்தநல் வெளியிடை
அரசுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
இவ்வெளி எல்லாம் இலங்க அண்டங்கள்
அவ்வயின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி

## 10. அண்டப் பகுதி விரி

ஓங்கிய அண்டம் ஒளிபெற முச்சுடர்
ஆங்கிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
சிருட்டித் தலைவரைச் சிருட்டி அண்டங்களை
அருள்திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
காவல்செய் தலைவரைக் காவல் அணடங்களை
ஆவகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி

அழித்தல்செய் தலைவரை அவர் அண்டங்களை
அழுக்கற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
மறைத்திடு தலைவரை மற்றும் அண்டங்களை
அறத்தொடு வகுத்த அருட்பெருஞ்ஜோதி 590.

தெளிவுசெய் தலைவரைத் திகழும் அண்டங்களை
அளிபெற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
விந்துவாம் சத்தியை விந்தின் அண்டங்களை
அந்திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
ஓங்கார சத்திகள் உற்ற அண்டங்களை
ஆங்காக அமைத்த அருட்பெருஞ்ஜோதி
சத்தத் தலைவரைச் சாற்றும் அண்டங்களும்
அத்தகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நாதமாம் பிரமமும் நாத அண்டங்களும்
ஆதரம் வகுத்த அருட்பெருஞ்ஜோதி 600.

பகர்பரா சத்தியைப் பதியும் அண்டங்களை
அகம் அற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பரசிவ பதியைப் பரசிவாண்டங்களை
அரசுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
எண்ணில்பல் சத்தியை எண்ணில் அண்டங்களை
அண்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அளவில்பல் சத்தரை அளவில் அண்டங்களை
அளவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உயிர்வகை அண்டம் உலப்பில எண்ணில
அயர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 610.

## 11. கடல் வகை

களவில கடல்வகை கங்கில கரையில
அளவில வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கடலவை அனைத்தும் கரையின்றி நிலையுற
அடலனல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கடல்களும் மலைகளும் கதிகளும் நதிகளும்

அடல்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கடலிடைப் பல்வளம் கணித்து அதில் பல்உயிர்
அடல்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

## 12. மலை வளம்

மலையிடைப் பல்வளம் வகுத்து அதில் பல்உயிர்
அலைவற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 620.

## 13. எண் வகை

ஒன்றினில் ஒன்றே ஒன்றிடை ஆயிரம்
அன்றற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பத்திடை ஆயிரம் பகர் அதில்கோடி
அத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
நூற்றிடை இலக்கம் நுவல் அதில் அனந்தம்
ஆற்றிடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
கோடியில் அனந்த கோடி பல்கோடி
ஆடுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

## 14. வித்தும் விளைவும்

வித்தியல் ஒன்றாய் விளைவியல் பலவா
அத்தகை அமைத்த அருட்பெருஞ்ஜோதி 630.

விளைவியல் அனைத்தும் வித்திடை அடங்க
அளவுசெய்து அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்தும்பதமும் விளை உப கரிப்பும்
அத்திறல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடை முளையும் முளையிடை விளைவும்
அத்தக அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்தினுள் வித்தும் வித்ததில் வித்தும்
அத்திறல் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
விளைவினுள் விளைவும் விளைவதில் விளைவும்
அளைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 640.

முளையதின் முளையும் முளையினுள் முளையும்
அளைதர அமைத்த அருட்பெருஞ்ஜோதி
வித்திடைப் பதமும் பதத்திடை வித்தும்
அத்துற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
பதமதில் பதமும் பதத்தினுள் பதமும்
அதிர்வற வகுத்த அருட்பெருஞ்ஜோதி

### 15. ஒற்றுமை வேற்றுமை இயல்

ஒற்றுமை வேற்றுமை உரிமைகள் அனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பொருள்நிலை உறுப்பியல் பொதுவகை முதலிய
அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி 650.

உறவினில் உறவும் உறவினில் பகையும்
அறன்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பகையினில் பகையும் பகையினில் உறவும்
அகைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பாதியும் முழுதும் பதிசெயும் அந்தமும்
ஆதியும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
துணையும் நிமித்தமும் துலங்கதின் அதுவும்
அணைவுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உருவதின் உருவும் உருவினுள் உருவும்
அருள்உற அமைத்த அருட்பெருஞ்ஜோதி 660.

அருவினுள் அருவும் அருவதில் அருவும்
அருள்இயல் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
கரணமும் இடமும் கலைமுதல் அணையும் ஓர்
அரண்நிலை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உருவதில் அருவும் அருவதில் உருவும்
அருள்உற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வண்ணமும் வடிவும் மயங்கிய வகைபல
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
சிறுமையில் சிறுமையும் சிறுமையும் பெருமையும்
அறிதர வகுத்த அருட்பெருஞ்ஜோதி 670.

பெருமையில் பெருமையும் பெருமையில் சிறுமையும்
அருள்நிலை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
திண்மையில் திண்மையும் திண்மையில் நேர்மையும்
அண்மையில் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
மென்மையில் மென்மையும் மென்மையில் வன்மையும்
அன்மை அற்றமைத்த அருட்பெருஞ்ஜோதி
அடியினுள் அடியும் அடியிடை அடியும்
அடிஉற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
நடுவினுள் நடுவும் நடுவதில் நடுவும்
அடர்வுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி 680.

முடியினுள் முடியும் முடியினில் முடியும்
அடர்தர அமைத்த அருட்பெருஞ்ஜோதி

## 16. அகப் புறப்பூ

அகப்பூ அகவுறுப் பாக்க அதற்கவை
அகத்தே வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்பூ புறத்தில் புனையுறு வாக்கிட
அறத்துடன் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அகப்புறப் பூஅகப் புறஉறுப் பியற்றிட
அகத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி
புறப்புறப் பூவதில் புறப்புற உறுப்புற
அறத்திடை வகுத்த அருட்பெருஞ்ஜோதி 690.

## 17. நால்வகைத் தோற்ற விரி

பாரிடை வேர்வையில் பையிடை முட்டையில்
ஆருயிர் அமைக்கும் அருட்பெருஞ்ஜோதி
ஊர்வன பறப்பன உறுவன நடப்பன
ஆர்வுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அசைவில அசைவுள ஆருயிர்த் திரள்பல
அசலற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
அறிவொரு வகைமுதல் ஐவகை அறுவகை

அறிதர வகுத்த அருட்பெருஞ்ஜோதி
வெவ்வேறு இயலொடு வெவ்வேறு பயன்உற
அவ்வாறு அமைத்த அருட்பெருஞ்ஜோதி

சித்திர விசித்திர சிருட்டிகள் பலபல
அத்தகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

## 18. ஆண் பெண் இயல்

பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்ணும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்ணினுள் மூன்றும் ஆணினுள் இரண்டும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்ணிடை நான்கும் ஆணிடை மூன்றும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்இயல் ஆணும் ஆண்இயல் பெண்ணும்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

பெண்திறல் புறத்தும் ஆண்திறல் அகத்தும்
அண்டுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
பெண்இயல் மனமும் ஆண்இயல் அறிவும்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
தனித்தனி வடிவினும் தக்க ஆண்பெண் இயல்
அனைத்துற வகுத்த அருட்பெருஞ்ஜோதி
உனற்கரும் உயிர்உள உடல்உள உலகுள
அனைத்தையும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி
ஓவுறா எழுவகை உயிர்முதல் அனைத்தும்
ஆவகை வகுத்த அருட்பெருஞ்ஜோதி

பைகளில் முட்டையில் பாரினில் வேர்வினில்
ஐபெற அமைத்த அருட்பெருஞ்ஜோதி

## 19. காத்தருள் விரி

தாய் கருப்பையினுள் தங்கிய உயிர்களை
        ஆய்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
முட்டைவாய்ப் பயிலும் முழுஉயிர்த் திரள்களை
        அட்டமே காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
நிலம்பெறும் உயிர்வகை நீள்குழு அனைத்தும்
        அலம்பெறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வேர்வுற உதித்த மிகும் உயிர்த் திரள்களை
        ஆர்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி 730.

உடல்உறு பிணியால் உயிர் உடல் கெடாவகை
        அடல்உறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
சிசு முதல் பருவச் செயல்களின் உயிர்களை
        அசைவறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
உயிர்உறும் உடலையும் உடல்உறும் உயிரையும்
        அயர்வறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
பாடுறும் அவத்தைகள் பலவினும் உயிர்களை
        ஆடுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
முச்சுடர் ஆதியால் எச்சக உயிரையும்
        அச்சறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி 740.

வான்முகில் சத்தியால் மழைபொழி வித்து உயிர்
        ஆனறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
இன்புறு சத்தியால் எழில்மழை பொழிவித்து
        அன்புறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
எண்இயல் சத்தியால் எல்லா உலகினும்
        அண்உயிர் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
அண்டப் புறப்புற அமுதம் பொழிந்து உயிர்
        அண்டுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
தேவரை எல்லாம் திகழ்புற அமுதளித்து
        ஆவகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி 750.

அகப்புற அமுதளித்து ஐவர் ஆதிகளை
அகப்படக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
தரும் அமுதால் சத்தி சத்தர்களை
அருளினிற் காக்கும் அருட்பெருஞ்ஜோதி
காலமும் நியதியும் காட்டி எவ்வுயிரையும்
ஆலுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
விச்சையை இச்சையை விளைவித்து உயிர்களை
அச்சறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
போகமும் களிப்பும் பொருந்துவித்து உயிர்களை
ஆகமுட் காக்கும் அருட்பெருஞ்ஜோதி 760.

கலையறிவு அளித்துக் களிப்பினில் உயிரெலாம்
அலைவறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
விடய நிகழ்ச்சியால் மிகுமுயிர் அனைத்தையும்
அடைவுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
துன்பளித்து ஆங்கே சுகமளித்து உயிர்களை
அன்புறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
கரணேந் தியத்தால் களிப்புற உயிர்களை
அரண்நேர்ந்து அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
எத்தகை எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அத்தகை அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி 770.

எப்படி எவ்வுயிர் எண்ணின அவ்வுயிர்க்கு
அப்படி அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
ஏங்காது உயிர்த்திரள் எங்கெங்கு இருந்தன
ஆங்காங்கு அளித்தருள் அருட்பெருஞ்ஜோதி
சொல்லுறும் அசுத்தத் தொல்லுயிர்க் கவ்வகை
அல்லலில் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோயுயிர்க் கிருமையின்
அத்தகை காத்தருள் அருட்பெருஞ்ஜோதி
வாய்ந்திடும் சுத்த வகையுயிர்க்கு ஒருமையின்
ஆய்ந்துறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி 780.

எவையெலாம் எவையெலாம் ஈண்டின ஈண்டின
அவையெலாம் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி

## 20. அடக்கியருள் விரி

அண்டத் துரிசையும் அகிலத் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
பிண்டத் துரிசையும் பேருயிர்த் துரிசையும்
அண்டற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
உயிருறும் மாயையின் உறுவிரிவு அனைத்தும்
அயிரற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
உயிருறும் இருவினை யுறுவிரிவு அனைத்தும்
அயர்வற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி 790.

காமப் புடைப்புயிர் கண்தொடராவகை
ஆமற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
பொங்குறு வெகுளிப் புடைப்புகள் எல்லாம்
அங்கற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மதம்புரை மோகமும் மற்றவும் ஆங்காங்கு
அதம்பெற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
வடுவுறும் அசுத்தவாதனை அனைத்தையும்
அடர்பற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமும் அசுத்தமும் தோய்ந்தவா தனைகளை
அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி 800.

நால்வயிற் றுரிசும் நண்ணுயிர் ஆதியில்
ஆலற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
நால்வயிற் படைப்பும் நால்வயிற் காப்பும்
ஆலற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மூவிடத்து இருமையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடத்து அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மூவிட மும்மையின் முன்னிய தொழிற்கரில்
ஆவிடம் அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
தத்துவச் சேட்டையும் தத்துவத் துரிசும்
அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி 810.

சுத்தமா நிலையில் சூழுறு விரிவை
        அத்தகை அடக்கும் அருட்பெருஞ்ஜோதி

## 21. திரை விளக்கம்

கரைவின்மா மாயைக் கரும்பெரும் திரையால்
        அரைசது மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
பேருறு நீலப்பெருந்திரை அதனால்
        ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
பச்சைத் திரையால் பரவெளி அதனை
        அச்சுற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
செம்மைத் திரையால் சித்துறு வெளியை
        அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி 820.

பொன்மைத் திரையால் பொருளுறு வெளியை
        அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
வெண்மைத் திரையால் மெய்ப்பதி வெளியை
        அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
கலப்புத் திரையால் கருது அனுபவங்களை
        அலப்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
விடய நிலைகளை வெவ்வேறு திரைகளால்
        அடர்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி
தத்துவ நிலைகளைத் தனித்தனித் திரையால்
        அத்திறம் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி 830.

திரைமறைப்பெலாம் தீர்த்து ஆங்காங்கே
        அரசுறக் காட்டும் அருட்பெருஞ்ஜோதி

## 22. அருளில் தெருட்டல்

தோற்றமா மாயைத் தொடர்பறுத்து அருளின்
        ஆற்றலைக் காட்டும் அருட்பெருஞ்ஜோதி
சுத்தமா மாயைத் தொடர்பறுத்து அருளை
        அத்தகை காட்டும் அருட்பெருஞ்ஜோதி
எனைத்து ஆணவமுதல் எல்லாம் தவிர்த்தே

அனுக்கிர கம்புரி அருட்பெருஞ்ஜோதி
விடய மறைப்பெலாம் விடுவித்து உயிர்களை
அடைவுறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி

சொருப மறைப்பெலாம் தொலைப்பித்து உயிர்களை
அருளினில் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
மறைப்பின் மறந்தன வருவித்து ஆங்கே
அறத்தொடு தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
எவ்வகை உயிர்களும் இன்புற ஆங்கே
அவ்வகை தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
கடவுளர் மறைப்பைக் கடிந்தவர்க் கின்பம்
அடையுறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
சத்திகண் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்துறத் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி

சத்தர்கண் மறைப்பைத் தவிர்த்தவர்க் கின்பம்
அத்தகை தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
படைக்கும் தலைவர்கள் பற்பல கோடியை
அடைப்புறப் படைக்கும் அருட்பெருஞ்ஜோதி
காக்கும் தலைவர்கள் கணக்கில்பல் கோடியை
ஆக்குறக் காக்கும் அருட்பெருஞ்ஜோதி
அடக்கும் தலைவர்கள் அளவிலர் தம்மையும்
அடர்ப்பற அடக்கும் அருட்பெருஞ்ஜோதி
மறைக்கும் தலைவர்கள் வகைபல கோடியை
அறத்தொடு மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி

தெருட்டும் தலைவர்கள் சேர்பல கோடியை
அருள்திறம் தெருட்டும் அருட்பெருஞ்ஜோதி
ஐந்தொழில் ஆதிசெய் ஐவர் ஆதிகளை
ஐந்தொழில் ஆதிசெய் அருட்பெருஞ்ஜோதி
இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அளித்த அருட்பெருஞ்ஜோதி
செத்தவர் எல்லாம் சிரித்து ஆங் கெழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ்ஜோதி

இறந்தவர் எழுகவென்று எண்ணிஆங் கெழுப்பிட
அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி 870.

செத்தவர் எழுகெனச் செப்பிஆங் கெழுப்பிட
அத்திறல் எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி
சித்தெலாம் வல்ல திறனளித்து எனக்கே
அத்தனென்று ஓங்கும் அருட்பெருஞ்ஜோதி

## 23. தனிப்பொருள்

ஒன்றது இரண்டது ஒன்றின் இரண்டது
ஒன்றினுள் ஒன்றது ஒன்றெனும் ஒன்றே
ஒன்றல இரண்டல ஒன்றின் இரண்டல
ஒன்றினுள் ஒன்றல ஒன்றெனும் ஒன்றே
ஒன்றினில் ஒன்றுள ஒன்றினில் ஒன்றில
ஒன்றற ஒன்றிய ஒன்றெனும் ஒன்றே 880.

## 24. மெய்ப்பொருள்

களங்கநீத்து உலகம் களிப்புற மெய்ந்நெறி
விளங்க என்னுள்ளே விளங்கு மெய்ப்பொருளே
மூவிரு நிலையின் முடிநடு முடிமேல்
ஓவற விளங்கும் ஒருமை மெய்ப்பொருளே
எழுநிலை மிசையே இன்புறு ஆகி
வழுநிலை நீக்கி வயங்கு மெய்ப்பொருளே
நவநிலை மிசையே நடுவுறு நடுவே
சிவமயம் ஆகித் திகழ்ந்த மெய்ப்பொருளே
ஏகா தசநிலை யாதுஅதி னடுவே
ஏகா தனமிசை இருந்த மெய்ப்பொருளே 890.

திரையோ தசநிலை சிவவெளி நடுவே
வரைஓ தருசுக வாழ்க்கை மெய்ப்பொருளே
ஈரெண் ணிலைஎன இயம்புமேல் நிலையில்
பூரண சுகமாய்ப் பொருந்து மெய்ப்பொருளே
எல்லாநிலைகளும் இசைந்து ஆங்காங்கே
எல்லாம் ஆகி இலங்கு மெய்ப்பொருளே
மனாதிகள் பொருந்தா வானடு வானாய்

அனாதி உண்மையதாய் அமர்ந்த மெய்ப்பொருளே
தானொரு தானாய்த் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒரு தனிப்பொருளே

அதுவினுள் அதுவாய் அதுவே அதுவாய்
பொதுவினுள் நடிக்கும் பூரணப் பொருளே
இயல்பினுள் இயல்பாய் இயல்பே இயல்பாய்
உயலுற விளங்கும் ஒருதனிப் பொருளே
அருவினுள் அருவாய் அருவரு அருவாய்
உருவினுள் விளங்கும் ஒருபரம் பொருளே
அலகிலாச் சித்தாய் அதுநிலை அதுவாய்ப்
உலகெலாம் விளங்கும் ஒருதனிப் பொருளே
பொருளினுள் பொருளாய்ப்பொருளது பொருளாய்
ஒருமையின் விளங்கும் ஒருதனிப்பொருளே

ஆடுறு சித்திகள் அறுபத்துநான்கெழு
கோடியும் விளங்கக் குலவு மெய்ப்பொருளே
கூட்டுறு சித்திகள் கோடிபல் கோடியும்
ஆட்டுற விளங்கும் அரும்பெரும்பொருளே
அறிவுறு சித்திகள் அனந்த கோடிகளும்
பிறிவுற விளக்கும் பெரும் தனிப்பொருளே
வீடுகள் எல்லாம் விதிநெறி விளங்க
ஆடல்செய் தருளும் அரும்பெரும் பொருளே
பற்றுகள் எல்லாம் பதிநெறி விளங்க
உற்றருள் ஆடல்செய் ஒருதனிப்பொருளே

## 25. பராபர இயல்

பரத்தினில் பரமே பரத்தின்மேற்பரமே
பரத்தினுள் பரமே பரம்பரம் பரமே
பரம்பெறும் பரமே பரம்தரும் பரமே
பரம்பதம் பரமே பரம் சிதம்பரமே
பரம்புகழ் பரமே பரம்பகர் பரமே
பரஞ்சுக பரமே பரம்சிவ பரமே
பரங்கொள் சிற்பரமே பரஞ்செய் தற்பரமே

தரங்கொள் பொற்பரமே தனிப்பெரும்பரமே
வரம்பரா பரமே வணம்பரா பரமே
பரம்பரா பரமே பதம்பரா பரமே

## 26. பதவியல்

சத்தியபதமே சத்துவ பதமே
நித்திய பதமே நிற்குண பதமே
தத்துவ பதமே தற்பத பதமே
சித்துறு பதமே சிற்சுக பதமே
தம்பரம் பதமே தனிச்சுகம் பதமே
அம்பரம் பதமே அருட்பரம் பதமே
தந்திர பதமே சந்திர பதமே
மந்திர பதமே மந்தண பதமே
நவந்தரு பதமே நடந்தரு பதமே
சிவந்தரு பதமே சிவசிவ பதமே

## 27. சிவ ரகசியம்

பிரமமெய்க் கதியே பிரமமெய்ப்பதியே
பிரமநிற் குணமே பிரமசிற் குணமே
பிரமமே பிரமப் பெருநிலை மிசையுறும்
பரமமே பரம பதந்தரும் சிவமே
அவனோடு அவளாய் அதுவாய் அலவாய்
நவமா நிலைமிசை நண்ணிய சிவமே
எம்பொருளாகி எமக்கருள் புரியும்
செம்பொருளாகிய சிவமே சிவமே
ஒருநிலை இதுவே உயர்நிலை யெனுமொரு
திருநிலை மேவிய சிவமே சிவமே

மெய்வைத்து அழியா வெறுவெளி நடுவுறு
தெய்வப் பதியாம் சிவமே சிவமே
புரை தவிர்த்து எனக்கே பொன்முடி சூட்டிச்
சிரமுற நாட்டிய சிவமே சிவமே
கல்வியும் சாகாக் கல்வியும் அழியாச்
செல்வமும் அளித்த சிவமே சிவமே

அருளமு தெனக்கே அளித்தருள் நெறிவாய்த்
        தெருளுற வளர்க்கும் சிவமே சிவமே
சத்தெலாம் ஆகியும் தானொரு தானாம்
        சித்தெலாம் வல்லதோர் திருவருட் சிவமே 960.

எங்கே கருணை இயற்கையின் உள்ளன
        அங்கே விளங்கிய அருட்பெருஞ்சிவமே
யாரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
        சீரே அளிக்கும் சிதம்பர சிவமே
பொய்ந்நெறி அனைத்தினும் புகுத்தா தெனையருள்
        செந்நெறி செலுத்திய சிற்சபைச் சிவமே
கொல்லா நெறியே குருவருள் நெறியெனப்
        பல்கால் எனக்குப் பகர்ந்த மெய்ச்சிவமே
உயிரெலாம் பொதுவின் உளம்பட நோக்குக
        செயிரெலாம் விடுகெனச் செப்பிய சிவமே 970.

பயிர்ப்புறு கரணப் பரிசுகள் பற்பல
        உயிர்த்திரள் ஒன்றென உரைத்த மெய்ச்சிவமே
உயிருள்யாம் எம்முள் உயிர் இவை யுணர்ந்தே
        உயிர்நலம் பரவுகென்று உரைத்த மெய்ச்சிவமே
இயலருள் ஒளிஓர் ஏகதே சத்தினாம்
        உயிரொளிகாண்க வென்றுரைத்த மெய்ச்சிவமே

## 28. திருவருள் வல்லபம்

அருளலாது அணுவும் அசைந்திடாது அதனால்
        அருள்நலம் பரவுகென்று அறைந்த மெய்ச்சிவமே
அருளுறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை
        அருளுற முயல்கவென்று அருளியசிவமே 980.

அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்
        இருள்நெறி யென எனக்கு இயம்பிய சிவமே
அருள்பெறில் துரும்பும் ஓர்ஐந்தொழில் புரியும்
        தெருளிது எனவே செப்பிய சிவமே

அருளறிவு ஒன்றெ அறிவுமற் றெல்லாம்
மருளறிவு என்றே வகுத்த மெய்ச்சிவமே
அருட்சுகம் ஒன்றே அரும்பெறல் பெருஞ்சுகம்
மருட்சுகம் பிறவென வகுத்த மெய்ச்சிவமே
அருட்பேறு அதுவே அரும்பெறல் பெரும்பேறு
இருட்பேறு அறுக்கும் என்றியம் பியசிவமே
அருள்தனி வல்லபம் அதுவே எலாஞ்செய்
பொருள்தனிச் சித்தெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருளறியார் தமை அறியார் எம்மையும்
பொருளறியார் எனப் புகன்ற மெய்ச்சிவமே
அருள்நிலை ஒன்றே அனைத்தும் பெறுநிலை
பொருள்நிலை காண்கெனப் புகன்ற மெய்ச்சிவமே
அருள்வடிவு அதுவே அழியாத் தனிவடிவு
அருள்பெற முயலுகென்று அருளிய சிவமே
அருளே நம்மியல் அருளே நம்முரு
அருளே நம்வடிவாம் என்ற சிவமே

அருளே நம்மடி அருளே நம்முடி
அருளே நம்நடு வாம் என்ற சிவமே
அருளே நம்மறிவு அருளே நம்மனம்
அருளே நம்குணமாம் என்ற சிவமே
அருளே நம்பதி அருளே நம்பதம்
அருளே நம்மிடமாம் என்ற சிவமே
அருளே நம்துணை அருளே நம்தொழில்
அருளே நம் விருப்பாம் என்ற சிவமே
அருளே நம்பொருள் அருளே நம் ஒளி
அருளே நாம் அறிவாயென்ற சிவமே

அருளே நம்குலம் அருளே நம்இனம்
அருளே நாம் அறிவாயயென்ற சிவமே
அருளே நம்சுகம் அருளே நம்பெயர்
அருளே நாம்அறி வாயென்ற சிவமே
அருளொளி அடைந்தனை அருளமுது உண்டனை
அருண்மதி வாழ்கவென்று அருளிய சிவமே

அருள்நிலை பெற்றனை அருள்வடிவு உற்றனை
அருளரசு இயற்றுகென்று அருளிய சிவமே

### 29. சிவபதி

உள்ளகத் தமர்ந்தெனது உயிரிற் கலந்தருள்
வள்ளல்சிற் றம்பலம் வளர்சிவ பதியே
நிகரிலா இன்ப நிலைநடு வைத்தெனைத்
தகவொடு காக்கும் தனிச் சிவபதியே
சுத்த சன்மார்க்க சுகநிலை தனிலெனைச்
சத்தியன் ஆக்கிய தனிச் சிவபதியே
ஐவரும் காண்டற்கு அரும் பெரும்பொருளென்
கைவரப்புரிந்த கதிசிவ பதியே
துன்பம் தொலைத்தருள் ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கருள் எழிற் சிவபதியே
சித்தமும் வாக்கும் செல்லாப் பெருநிலை
ஒத்துற வேற்றிய ஒரு சிவபதியே

கையறவு அனைத்துங் கடிந்து எனைத்தேற்றி
வையமேல் வைத்த மாசிவ பதியே
இன்புறச் சிறியேன் எண்ணுதோ றெண்ணுதோ
றன்பொடுஎன் கண்ணுறும் அருட்சிவபதியே
பிழையெலாம் பொறுத்து எனுள்பிறங்கிய கருணை
மழையெலாம் பொழிந்து வளர் சிவபதியே
உளத்தினும் கண்ணினும் உயிரினும் எனது
குளத்தினும் நிரம்பிய குருசிவ பதியே

### 30. அருள் குரு

பரமுடன் அபரம்பகர்நிலை இவையெனத்
திரமுற அருளிய திருவருட் குருவே

மதிநிலை இரவியின் வளர்நிலை அனலின்
திதிநிலை அனைத்தும் தெரித்த சற்குருவே
கணநிலை அவற்றின் கருநிலை அனைத்தும்
குணமுறத் தெரித்து உட்குலவு சற்குருவே

பதிநிலை பசுநிலை பாசநிலை எலாம்
மதியுறத் தெரித்து உள்வயங்கு சற்குருவே
பிரம ரகசியம் பேசி என்னுளத்தே
தரமுற விளங்கும் சாந்த சற்குருவே
பரம ரகசியம் பகர்ந்து எனதுளத்தே
வரமுற வளர்த்து வயங்கு சற்குருவே 1050.
சிவரகசியம் எலாம் தெரிவித்து எனக்கே
நவநிலை காட்டிய ஞான சற்குருவே
சத்தியல் அனைத்தும் சித்தியல் முழுதும்
அத்தகை தெரித்த அருட்சிவ குருவே
அறிபவை எல்லாம் அறிவித்து என்னுள்ளே
பிறிவற விளங்கும் பெரிய சற்குருவே
கேட்பவை எல்லாம் கேட்பித்து எனுள்ளே
வேட்கையின் விளங்கும் விமல சற்குருவே
காண்பவை எல்லாம் காட்டுவித்து எனக்கே
மாண்பதம் அளித்து வயங்கு சற்குருவே 1060.

செய்பவை எல்லாம் செய்வித்து எனக்கே
உய்பவை அளித்தெனுள் ஓங்கு சற்குருவே
உண்பவை எல்லாம் உண்ணுவித்து என்னுள்
பண்பினில் விளங்கும் பரம சற்குருவே
சாகாக் கல்வியின் தரமெலாம் கற்பித்து
ஏகாக் கரப்பொருள் ஈந்த சற்குருவே
சத்திய மாம்சிவ சித்திகள் அனைத்தையும்
மெய்த்தகை அளித்தெனுள் விளங்கு சற்குருவே
எல்லா நிலைகளும் ஏற்றிச் சித்தெலாம்
வல்லான் எனவெனை வைத்த சற்குருவே 1070.

## 31. உயிர்த் தாய்

சீருற அருளாம் தேசுற வழியாப்
பேருற என்னைப் பெற்ற நற்றாயே
பொருந்திய அருட்பெரும் போகமே உறுகெனப்
பெருந்தயவால் எனைப் பெற்ற நற்றாயே
ஆன்ற சன்மார்க்கம் அணிபெற எனைத்தான்

ஈன்றமுது அளித்த இனிய நற்றாயே
பசித்திடுதோறும் என்பால் அணைந்து அருளால்
வசித்தமுது அருள்புரி வாய்மை நற்றாயே
தளர்ந்ததோ றடியேன் சார்பணைந் தென்னை
உளந்தெளி வித்த ஒருமை நற்றாயே

அருளமு தேமுதல் ஐவகை அமுதமும்
தெருளுற எனக்கருள் செல்வ நற்றாயே
இயலமு தேமுதல் எழுவகை அமுதமும்
உயலுற எனக்கருள் உரிய நற்றாயே
நண்புறும் எண்வகை நவவகை அமுதமும்
பண்புற எனக்கருள் பண்புடைத்தாயே
மற்றுள அமுத வகையெலாம் எனக்கே
உற்றுணவு அளித்தருள் ஓங்கு நற்றாயே
கலக்கமும் அச்சமும் கடிந்து என துளத்தே
அலக்கணும் தவிர்த்தருள் அன்புடைத்தாயே

துய்ப்பினி லனைத்தும் சுகம்பெற அளித்தெனக்கு
எய்ப்பெலாம் தவிர்த்த இன்புடைத்தாயே
சித்திகளெல்லாம் தெளிந்திட எனக்கே
சத்தியை அளித்த தயவுடைத் தாயே
சத்தினி பாதந் தனையளித்து எனைமேல்
வைத்தமு தளித்த மரபுடைத்தாயே
சத்தி சத்தர்கள்எலாம் சார்ந்தெனது ஏவல்செய்
சித்திளை அளித்த தெய்வ நற்றாயே
தன்னிகர் இல்லாத் தலைவனைக் காட்டியே
என்னை மேலேற்றிய இனிய நற்றாயே

வெளிப்பட விரும்பிய விளைவெலாம் எனக்கே
அளித்தளித்து இன்புசெய் அன்புடைத் தாயே
எண்அகத் தொடுபுறத்து என்னைஎஞ் ஞான்றும்
கண்ணெனக் காக்கும் கருணை நற்றாயே
இன்னருள் அமுதளித்து இறவாத் திறல்புரிந்து

என்னை வளர்த்திடும் இன்புடைத்தாயே
என்னுடல் என்னுயிர் என்னறிவு எல்லாம்
தன்னவென் றாக்கிய தயவுடைத்தாயே
தெரியா வகையால் சிறியேன் தளர்ந்திடத்
தரியாது அணைத்த தயவுடைத் தாயே 1110.

சினமுதல் அனைத்தையும் தீர்த்தெனை நனவினும்
கனவினும் பிரியாக் கருணை நற்றாயே
தூக்கமும் சோம்பும் என் துன்பமும் அச்சமும்
ஏக்கமும் நீக்கிய என் தனித் தாயே

## 33. உயிர்த் தந்தை

துன்பெலாந் தவிர்த்துளே அன்பெலாம் நிரம்ப
இன்பெலாம் அளித்த என்தனித் தந்தையே
எல்லா நன்மையும் என்றனுக்கு அளித்த
எல்லாம் வல்லசித்து என்தனித் தந்தையே
நாயிற் கடையேன் நலம்பெறக் காட்டிய
தாயிற் பெரிதும் தயவுடைத் தந்தையே 1120.

அறிவிலாப் பருவத்து அறிவெனக்கு அளித்தே
பிறிவிலாது அமர்ந்த பேரருள் தந்தையே
புன்னிகர் இல்லேன் பொருட்டு இவண் அடைந்த
தன்னிகர் இல்லாத் தனிப்பெருந் தந்தையே
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த அருட்ஜோதி
சகத்தினில் எனக்கே தந்த மெய்த்தந்தையே
இணையிலாக் களிப்புற்று இருந்திட எனக்கே
துணையடி சென்னியில் சூட்டிய தந்தையே
ஆதியீறு அறியா அருளரசு ஆட்சியில்
ஜோதிமா மகுடம் சூட்டிய தந்தையே 1130.

எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப்
பட்டிமண்டபத்தில் பதித்த மெய்த் தந்தையே
தங்கோல் அளவது தந்து அருட்ஜோதிச்

செங்கோல் செலுத்தெனச் செப்பிய தந்தையே
தன்பொருள் அனைத்தையும் தன் அரசாட்சியில்
என்பொருள் ஆக்கிய என்றனித் தந்தையே
தன்வடிவு அனைத்தையும் தன் அரசாட்சியில்
என்வடிவு ஆக்கிய என்றனித் தந்தையே
தன்சித் தனைத்தையும் தன் சமுகத்தினில்
என்சித் தாக்கிய என்றனித் தந்தையே
தன்வசம் ஆகிய தத்துவம் அனைத்தையும்
என்வசம் ஆக்கிய என்னுயிர்த் தந்தையே
தன்கையில் பிடித்த தனி அருட்ஜோதியை
என்கையில் கொடுத்த என்றனித் தந்தையே
தன்னையும் தன்னருள் சத்தியின் வடிவையும்
என்னையும் ஒன்றென இயற்றிய தந்தையே
தன்இயல் என்இயல் தன்செயல் என்செயல்
என்ன இயற்றிய என்றனித் தந்தையே
தன்உரு என்உரு தன்உரை என்உரை
என்ன இயற்றிய என்றனித் தந்தையே

சதுரப் பேரருள் தனிப்பெரும் தலைவனென்று
எதிரற்று ஓங்கிய என்னுடைத் தந்தையே
மனவாக்கறியா வரைப்பினில் எனக்கே
இனவாக் கருளிய என்னுயிர்த் தந்தையே
உணர்ந்துணர்ந்து உணரினும் உணராப் பெருநிலை
அணைந்திட எனக்கே அருளிய தந்தையே
துரிய வாழ்வுடனே சுகபூரணமெனும்
பெரிய வாழ்வளித்த பெருந்தனித் தந்தையே
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
பேறளித்து ஆண்ட பெருந்தகைத் தந்தையே

எவ்வகைத் திறத்தினும் எய்துதற்கு அரிதாம்
அவ்வகை நிலையெனக் களித்த நற்றந்தையே
இனிப் பிறவாநெறி எனக்களித்து அருளிய
தனிப்பெரும் தலைமைத் தந்தையே தந்தையே

### 33. உயிர்த் துணை

பற்றயர்ந்து அஞ்சி பரிவுகண் டணைந்து எனைச்
சற்றுமஞ்சேல் எனத் தாங்கிய துணையே
தளர்ந்தவத் தருணம் என் தளர்வெலாம் தவிர்த்துட்
கிளர்ந்திட எனக்குக் கிடைத்த மெய்த்துணையே
துறையிது வழியிது துணிவிது நீசெயும்
முறையிது எனவே மொழிந்த மெய்த்துணையே 1170.
எங்குறு தீமையும் எனைத்தொடரா வகை
கங்குலும் பகலும் மெய்க்காவல் செய்துணையே
வேண்டிய வேண்டிய விருப்பெலாம் எனக்கே
ஈண்டிருந்து அருள்புரி என்னுயிர்த் துணையே
இகத்தினும் பரத்தினும் எனக்குஇடர் சாராது
அகத்தினும் புறத்தினும் அமர்ந்த மெய்த்துணையே

### 34. உயிர் நட்பு

அயர்வற எனக்கே அருட்துணை யாகிஎன்
உயிரினும் சிறந்த ஒருமை என் நட்பே
அன்பினில் கலந்து எனதறிவினில் பயின்றே
இன்பினில் அளைந்தஎன் இன்னுயிர் நட்பே 1180.

நான் புரிவன எலாம்தான் புரிந்து எனக்கே
வான்பதம் அளிக்க வாய்த்த நன்நட்பே
உள்ளமும் உணர்ச்சியும் உயிரும் கலந்துகொண்டு
எள்ளுறு நெய்யில் என்உள்ளுறும் நட்பே
செற்றமும் தீமையும் தீர்த்துநான் செய்த
குற்றமும் குணமாக் கொண்ட என்நட்பே
குணங்குறி முதலிய குறித்திடாது எனையே
அணங்கறக் கலந்த அன்புடை நட்பே
பிணக்கும் பேதமும் பேயுல கோர்புகல்
கணக்குந் தீர்த்தெனைக் கலந்தநன் நட்பே 1190.

சவலை நெஞ்சகத்தின் தளர்ச்சியும் அச்சமும்
கவலையும் தவிர்த்தெனைக் கலந்தநன் நட்பே

## 35. உயிர் உறவு

களைப்பறிந் தெடுத்துக் கலக்கந் தவிர்த்தெனக்கு
இளைப்பறிந்து உதவிய என்னுயிர் உறவே
தன்னைத் தழுவுறு தரஞ்சிறிது அறியா
என்னைத் தழுவிய என்னுயிர் உறவே
மனக்குறை நீக்கிநல் வாழ்வளித்து என்றும்
எனக்குறவு ஆகிய என்னுயிர் உறவே
துன்னும் அனாதியே சூழ்ந்துஎனைப் பிரியாது
என்னுறவு ஆகிய என்னுயிர் உறவே

## 36. இயற்கை உண்மை (சத்து)

என்றுமோர் நிலையாய் என்றுமோர் இயலாய்
என்றும்உள் ளதுவாம் என்தனிச் சத்தே
அனைத்துலகு அவைகளும் ஆங்காங்கு உணரினும்
இணைத்தென அறியா என்தனிச் சத்தே
பொதுமறை முடிகளும் புகலவை முடிகளும்
இதுவெனற்கு அரிதாம் என்தனிச் சத்தே
ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்
ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே
சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே
இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே

துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருளென
உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்ச்சத்தே
அன்றதன் அப்பால் அதன்பரத்து அதுதான்
என்றிட நிறைந்த என்தனிச் சத்தே

## 37. இயற்கை விளக்கம் (சித்து)

என்றும் உள்ளதுவாய் எங்கும்ஓர் நிறைவாய்
என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே
சத்திகள் பலவாய்ச் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே
தத்துவம் பலவாய்த் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே

படிநிலை பலவாய்ப் பதநிலை பலவாய்
இடிவற விளங்கிடும் என்தனிச் சித்தே
மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்
ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே
உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்
இயலுற விளக்கிடும் என்தனிச் சித்தே
அறிவவை பலவாய் அறிவன பலவாய்
எறிவற விளக்கிடு என்தனிச் சித்தே
நினைவவை பலவாய் நினைவன பலவாய்
இனைவற விளக்கிடும் என்தனிச் சித்தே

காட்சிகள் பலவாய்க் காண்பன பலவாய்
ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே
செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்
எய்வற விளக்கிடும் என்தனிச் சித்தே
அண்டசராசரம் அனைத்தையும் பிறவையும்
எண்தர விளக்கும் என்தனிச் சித்தே
எல்லாம் வல்லசித்து எனமறை புகன்றிட
எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே

### 38. இயற்கை இன்பம் (ஆனந்தம்)

ஒன்றதில் ஒன்றென்று உரைக்கவும் படாதாய்
என்றும் ஓர் படித்தாம் என்தனி இன்பே

இதுஅது என்னா இயலுடை அதுவாய்
எதிர்அற நிறைந்த என்தனி இன்பே
ஆக்குறு மவத்தைகள் அனைத்தையும் கடந்துமேல்
ஏக்கற நிறைந்த என்தனி இன்பே
அறிவுக்கு அறிவினில் அதுஅது அதுவாய்
எறிவற்று ஓங்கிய என்தனி இன்பே
விடயம் எவற்றினும் மேன்மேல் விளைந்தவை
இடையிடை ஓங்கிய என்தனி இன்பே
இம்மையும் மறுமையும் இயம்பிடும் ஒருமையும்
எம்மையும் நிரம்பிடும் என்தனி இன்பே

முத்தர்கள் சித்தர்கள் சத்திகள் சத்தர்கள்
எத்திறத் தவர்க்குமாம் என்தனி இன்பே
எல்லாநிலைகளின் எல்லா உயிருறும்
எல்லா இன்புமாம் என்தனி இன்பே

## 39. அருள் அமுதம்

கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின்
விரும்புறும் இரதமும் மிக்கதீம் பாலும்
குணங்கொள் கோல்தேனும கூட்டி ஒன்றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகை உற இயற்றிய
உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணமுறும் இன்ப மயமே அதுவாய்க் 1260.

கலந்து அறிவுருவாய்க் கருதுதற்கு அரிதாய்
நலந்தரு விளக்கமும் நவிலரும் தண்மையும்
உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்றன் உயிருளம் உடம்புடன்
எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்து
எல்லாம் வல்லசித்து இயற்கைய தாகிச்
சாகா வரமும் தனித்த பேரறிவும்
மாகா தலிற்சிவ வல்லப சத்தியும்
செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மையதாகிப் 1270.

பூரண வடிவாய்ப் பொங்கிமேல் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு
நடந்திகழ் கின்ற மெய்ஞ்ஞான ஆரமுதே
சத்திய அமுதே தனித்திரு அமுதே
நித்திய அமுதே நிறைசிவ அமுதே
சச்சி தானந்தத் தனி முதல் அமுதே
மெய்ச்சிதா காச விளைவருள் அமுதே

ஆனந்த அமுதே அருளொளி அமுதே
தானந்தம் இல்லாத் தத்துவ அமுதே

நவநிலை தரும்ஓர் நல்லதெள்ளமுதே
சிவநிலை தனிலே திரண்ட உள்ளமுதே
பொய்படாக் கருணைப் புண்ணிய அமுதே
கைபடாப் பெருஞ்சீர் கடவுள் வானமுதே
அகம்புறம் அகப்புறம் ஆகிய புறப்புறம்
உகந்தநான்கு இடத்தும் ஓங்கிய அமுதே
பனிமுதல் நீக்கிய பரம்பர அமுதே
தனிமுதல் ஆய சிதம்பர அமுதே
உலகெலாம் கொள்ளினும் உலப்பிலா அமுதே
அலகிலாப் பெருந்திறல் அற்புத அமுதே

## 40. மணி

அண்டமும் அதன்மேல் அண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பரம்பர மணியே
பிண்டமும் அதிலுறு பிண்டமும் அவற்றுள
பண்டமும் காட்டிய பராபர மணியே
நினைத்தவை நினைத்தவை நினைத்தாங்கு எய்துற
அனைத்தையும் தரும் ஓர் அரும்பெறல் மணியே
விண்பதம் அனைத்தும் மேல்பதம் முழுவதும்
கண்பெற நடத்தும் ககனமா மணியே
பார்பதம் அனைத்தும் பகரடி முழுவதும்
சார்புற நடத்தும் சரவொளி மணியே

அண்டகோடிகள் எலாம் அரைக்கணத்து ஏகிக்
கண்டுகொண்டிட ஒளிர் கலைநிறை மணியே
சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவி யுள்விளங்கும் வித்தக மணியே
மூவரும் முனிவரும் முத்தரும் சித்தரும்
தேவரும் மதிக்கும் சித்திசெய் மணியே
தாழ்வெலாம் தவிர்த்துச் சகமிசை அழியா
வாழ்வெனக் களித்த வளரொளி மணியே

நவமணி முதலிய நலமெலாம் தருமொரு
சிவமணி எனும் அருட்செல்வமா மணியே

## 41. மந்திரம்

வான்பெறற்கு அரியவகையெலாம் விரைந்து
நான் பெறவளித்த நாத மந்திரமே
கற்பம் பலபல கழியினும் அழியாப்
பொற்புற அளித்த புனித மந்திரமே
அகரமும் உகரமும் அழியாச் சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே
ஐந்தென எட்டென ஆறென நான்கென
முந்துறு மறைமுறை மொழியு மந்திரமே
வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும்
ஓதநின்று உலவாது ஓங்கு மந்திரமே

## 42. மருந்து

உடற்பிணி யனைத்தையும் உயிர்ப்பிணி யனைத்தையும்
அடர்ப்பறத் தவிர்த்த அருட்சிவ மருந்தே
சித்திக்கு மூலமாம் சிவமருந்து எனவுளம்
தித்திக்கு ஞானத் திருவருள் மருந்தே
இறந்தவர் எல்லாம் எழுந்திடப் புரியும்
சிறந்தவல் லபமுறு திருவருள் மருந்தே
மரணப் பெரும்பிணி வாரா வகைமிகு
கரணப் பெருந்திறல் காட்டிய மருந்தே
நரைதிரை மூப்பவை நண்ணா வகைதரும்
உரைதரு பெருஞ்சீர் உடையநன் மருந்தே

என்றே என்னினும் இளமையோடு இருக்க
நன்றே தரும்ஒரு ஞானமா மருந்தே
மலப்பிணி தவிர்த்தருள் வலம்தரு கின்றதோர்
நலத்தகை அதுவென நாட்டிய மருந்தே
சிற்சபை நடுவே திருநடம் புரியும்
அற்புத மருந்தெனும் ஆனந்த மருந்தே

## 43. மாற்றறியாப் பொன்

இடையுறப் படாத இயற்கை விளக்கமாய்த்
        தடை ஒன்றும் இல்லாத் தகவுடை யதுவாய்
மாற்றிவை என்ன மதித்து அளப்பரிதாய்
        ஊற்றமும் வண்ணமும் ஒருங்குடை அதுவாய்

காட்சிக் கினியநற் கலையுடை அதுவாய்
        ஆட்சிக் குரியபன் மாட்சியும் உடைத்தாய்
கைதவர் கனவினும் காண்டற்கு அரிதாய்ச்
        செய்தவப் பயனாந் திருவருள் வலத்தால்
உளம்பெறும் இடமெலாம் உதவுக எனவே
        வளம்பட வாய்த்து மன்னிய பொன்னே
புடம்படாத் தரமும் விடம்படாத் திறமும்
        வடம்படா நலமும் வாய்த்த செம்பொன்னே
மும்மையும் தருமொரு செம்மையை உடைத்தாய்
        இம்மையே கிடைத்து இங்கிலங்கிய பொன்னே

எடுத்தெடுத்து உதவினும் என்றும் குறையாது
        அடுத்தடுத்து ஓங்குமெய் அருளுடைப்பொன்னே
தளர்ந்திடேல் எடுக்கின் வளர்ந்திடு வேமெனக்
        கிளர்ந்திட உரைத்துக் கிடைத்த செம்பொன்னே
எண்ணிய தோறும் இயற்றுக என்றெனை
        அண்ணி என்கரத்தில் அமர்ந்தபைம் பொன்னே
நீகேண் மறக்கினும் நின்னையாம் விட்டுப்
        போகேம் என எனைப் பொருந்திய பொன்னே
எண்ணிய எண்ணியாங்கு எய்திட எனக்குப்
        பண்ணிய தவத்தால் பழுத்த செம்பொன்னே

விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப்
        புண்ணியப் பயனால் பூத்த செம்பொன்னே
நால்வகை நெறியினும் நாட்டுக எனவே
        பால்வகை முழுதும் பணித்த பைம்பொன்னே
எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
        முழுவகை காட்டி முயங்கிய பொன்னே

## 44. உலவா நிதி

எண்ணியப்படி எலாம் இயற்றுக என்றெனைப்
புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே
ஊழிதோ றூழி உலப்புறாது ஓங்கி
வாழி என்று எனக்கு வாய்த்த நன்னிதியே 1370.

இதமுற வூழிதோறு எடுத்தெடுத்து உலகோர்க்கு
உதவினும் உலவாது ஓங்கு நன்னிதியே
இருநிதி எழுநிதி இயல்நவ நிதிமுதல்
திருநிதி எல்லாம் தரும் ஒருநிதியே
எவ்வகை நிதிகளும் இந்தமா நிதியிடை
அவ்வகை கிடைக்குமென்று அருளிய நிதியே
அற்புதம் விளங்கும் அருட்பெரு நிதியே
கற்பனை கடந்த கருணைமா நிதியே
நற்குண நிதியே சற்குண நிதியே
நிற்குண நிதியே சிற்குண நிதியே 1380.

## 45. ஜோதி மலை

பளகிலாது ஓங்கும் பளிக்குமா மலையே
வளம்எலாம் நிறைந்த மாணிக்க மலையே
மதியுற விளங்கும் மரகத மலையே
வதிதரு பேரொளி வச்சிர மலையே
உரைமனம் கடந்தாங்கு ஓங்குபொன் மலையே
துரியமேல் வெளியில் ஜோதிமா மலையே

## 46. இயற்கைப் பொருண்மை

புற்பதம் திரைநுரை புரைமுதல் இலதோர்
அற்புதக் கடலே அமுதத்தண் கடலே
இருட்கலை தவிர்த்தொளி எல்லாம் வழங்கிய
அருட்பெருங் கடலே ஆனந்தக் கடலே 1390.

பவக்கடல் கடந்துநான் பார்த்தபோது அருகே
உவப்புறு வளங்கொண்டு ஓங்கிய கரையே

என்துயர்ச் சோடைகள் எல்லாம் தவிர்த்துளம்
நன்றுற விளங்கிய நந்தனக்காவே
சேற்றுநீர் இன்றிநல் தீஞ்சுவை தரும்ஓர்
ஊற்றுநீர் நிரம்பஉடைய பூந்தடமே
கோடைவாய் விரிந்த குளிர்தரு நிழலே
மேடைவாய் வீசிய மெல்லிய காற்றே
களைப்பறக் கிடைத்த கருணை நன்னீரே
இளைப்பற வாய்த்த இன்சுவை உணவே

தென்னைவாய்க் கிடைத்த செவ்விளநீரே
தென்னை வான் பலத்தில் திருகுதீம் பாலே
நீர்நசை தவிர்க்கும் நெல்லியங் கனியே
வேர்விளை பலவின் மென்சுவைச் சுளையே
கட்டுமாம் பழமே கதலிவான் பழமே
இட்ட நற்சுவைசெய் இலந்தையங் கனியே
புனிதவான் தருவில் புதுமையாம் பலமே
கனி எலாங் கூட்டிக் கலந்த தீஞ்சுவையே
இதந்தரு கரும்பில் எடுத்த தீஞ்சாறே
பதந்தரு வெல்லப் பாகினின் சுவையே

சாலவே இனிக்கும் சர்க்கரைத் திரளே
ஏலவே நாவுக்கு இனிய கற்கண்டே
உலப்புறாது இனிக்கும் உயர்மலைத் தேனே
கலப்புறா மதுரம் கனிந்த கோல்தேனே
நவையிலாது எனக்கு நண்ணிய நறவே
சுவையெலாம் திரட்டிய தூயதீம் பதமே
பதம்பெறக் காய்ச்சிய பசு நறும்பாலே
இதம்பெற உருக்கிய இளம்பசு நெய்யே
உலர்ந்திடாது என்றும் ஒரு படித்து ஆகி
மலர்ந்துநல் வண்ணம் வயங்கிய மலரே

இகந்தரு புவிமுதல் எவ்வுலகு உயிர்களும்
உகந்திட மணக்கும் சுகந்த நல்மணமே
யாழுறும் இசையே இனிய இன்னிசையே
ஏழுறும் இசையே இயல் அருளிசையே
திவள்ஒளிப் பருவம் சேர்ந்த நல்லவளே
அவளொடும் கூடி அடைந்ததோர் சுகமே
நாதநல் வரைப்பில் நண்ணிய பாட்டே
வேதகீதத்தில் விளை திருப்பாட்டே
நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே 1430.

நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே
என்மனக் கண்ணே என் அருட் கண்ணே
என் இரு கண்ணே என்கணுண் மணியே
என்பெருங் களிப்பே என்பெரும் பொருளே
என்பெருந் திறலே என்பெரும் செயலே
என்பெருந் தவமே என்தவப் பலனே
என்பெரும் சுகமே என்பெரும் பேறே
என்பெரு வாழ்வே என்றன் வாழ் முதலே
என்பெரு வழக்கே என்பெரும் கணக்கே 1440.

என்பெரு நலமே என்பெரும் குலமே
என்பெரு வலமே என் பெரும்புலமே
என்பெரு வரமே என்பெரும் தரமே
என்பெரு நெறியே என்பெரு நிலையே
என்பெரும் குணமே என்பெரும் கருத்தே
என்பெருந் தயவே என்பெரும் கதியே
என்பெரும் பதியே என்னுயிர் இயலே
என்பெரு நிறைவே என்தனி அறிவே

## 47. தனி அன்பு

தோலெலாம் குழைந்திடச் சூழ் நரம்பனைத்தும்
மேலெலாம் கட்டவை விட்டுவிட்டு இயங்கிட

என்பெலாம் நெக்குநெக்கு இயலிடை நெகிழ்ந்திட
மென்புடைத் தசையெலாம் மெய்யுறத் தளர்ந்திட
இரத்தம் அனைத்தும் உள்இறுகிடச் சுக்கிலம்
உரத்திடை பந்தித்து ஒருதிரள் ஆயிட
மடலெலாம் மூளை மலர்ந்திட அமுதம்
உடலெலாம் ஊற்றெடுத்து ஓடிநிரம்பிட
ஒண்ணுதல் வியர்த்திட ஒளிமுகம் மலர்ந்திட
தண்ணிய உயிர்ப்பினில் சாந்தம் ததும்பிட
உண்ணகை தோற்றிட உரோமம் பொடித்திடக்
கண்ணில் நீர்பெருகிக் கால்வழிந்து ஓடிட

வாய்துடித்து அலறிட வளர்செவித் துணைகளில்
கூயிசைப் பொறியெலாம் கும்மெனக் கொட்டிட
மெய்யெலாம் குளிர்ந்திட மென்மார் பசைந்திடக்
கையெலாம் குவிர்ந்திடக் காலெலாம் சுலவிட
மனங்கனிந் துருகிட மதிநிறைந் தொளிர்ந்திட
இனம்பெறு சித்தம் இயைந்து களித்திட
அகங்காரம் ஆங்காங்கு அதிகரிப் பமைந்திடச்
சகங்காண உள்ளம் தழைத்து மலர்ந்திட
அறிவுறு அனைத்தும் ஆனந்தம் ஆயிடப்
பொறியுறும் ஆன்மதற் போதமும் போயிடத்

தத்துவம் அனைத்தும் தாம்ஒருங்கு ஒழிந்திடச்
சத்துவம் ஒன்றே தனித்துநின்று ஓங்கிட
உலகெலாம் விடயம் உளவெலாம் மறைந்திட
அலகிலா அருளின் ஆசைமேல் பொங்கிட
என்னுளத் தெழுந்து உயிர்எல்லாம் மலர்ந்திட
என்னுளத்து ஓங்கிய என்தனி அன்பே
பொன்னடி கண்டுஅருட் புத்தமுது உணவே
என்னுளத்து எழுந்த என்னுடை அன்பே

தன்னையே எனக்குத் தந்தருள் ஒளியால்
என்னை வேதித்த என் தனி அன்பே

என்னுளே அரும்பி என்னுளே மலர்ந்து
என்னுளே விரிந்த என்னுடை அன்பே
என்னுளே விளங்கி என்னுளே பழுத்து
என்னுளே கனிந்த என்னுடை அன்பே
தன்னுளே நிறைவுறு தரமெலாம் அளித்தே
என்னுளே நிறைந்த என்தனி அன்பே
துன்புள அனைத்தும் தொலைத்து எனதுருவை
இன்புறு ஆக்கிய என்னுடை அன்பே
பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டா
என்னுளம் கலந்த என்தனி அன்பே

தன்வசமாகித் ததும்பிமேல் பொங்கி
என்வசம் கடந்த என்னுடை அன்பே
தன்னுளே பொங்கிய தண்ணமுது உணவே
என்னுளே பொங்கிய என்தனி அன்பே

## 48. நித்திய விளக்கு

அருளொளி விளங்கிட ஆணவம் எனும் ஓர்
இருளற என்னுளத்து ஏற்றிய விளக்கே
துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத்து ஏற்றிய விளக்கே
மயலற அழியா வாழ்வு மேன்மேலும்
இயலுற என்னுளத்து ஏற்றிய விளக்கே

இடுவெளி அனைத்தும் இயலொளி விளங்கிட
நடுவெளி நடுவே நாட்டிய விளக்கே
கருவெளி அனைத்தும் கதிரொளி விளங்கிட
உருவெளி நடுவே ஒளிர்தரு விளக்கே
தேற்றிய வேதத் திருமுடி விளங்கிட
ஏற்றிய ஞான இயலொளி விளக்கே

ஆகம முடிமேல் அருளொளி விளங்கிட
        வேகமது அறவே விளங்கொளி விளக்கே
ஆரியர் வழுத்திய அருள்நிலை அனாதி
        காரியம் விளக்கும் ஓர் காரண விளக்கே

### 49. நிறைமதி

தண்ணிய அமுதே தந்து என துளத்தே
        புண்ணியம் பலித்த பூரணமதியே
உய்தர அமுதம் உதவி என்னுளத்தே
        செய்தவம் பலித்த திருவளர் மதியே
பதியெலாம் தழைக்கப் பதம்பெறும் அமுத
        நிதியெலாம் அளித்த நிறைதிரு மதியே
பாலெனத் தண்கதிர் பரப்பி எஞ்ஞான்றும்
        மேல்வெளி விளங்க விளங்கிய மதியே

### 50. கருணை மழை

உயங்கிய உள்ளமும் உயிரும் தழைத்திட
        வயங்கிய கருணை மழைபொழி மழையே

என்னையும் பணிகொண்டு என்னுளே நிரம்ப
        மன்னிய கருணை மழைபொழி மழையே
உளங்கொளும் எனக்கே உவகைமேல் பொங்கி
        வளங்கொளக் கருணை மழைபொழி மழையே
நலந்தர உடலுயிர் நல்லறிவு எனக்கே
        மலர்ந்திடக் கருணை மழைபொழி மழையே
தூய்மையால் எனது துரிசெலாம் நீக்கிநல்
        வாய்மையால் கருணை மழைபொழி மழையே

### 51. செஞ்சுடர்

வெம்மல இரவது விடிதரு ணந்தனில்
        செம்மையில் உதித்துளம் திகழ்ந்த செஞ்சுடரே

திரையெலாம் தவிர்த்துச் செவ்விஉற்று ஆங்கே
வரையெலாம் விளங்க வயங்கு செஞ்சுடரே
அலகிலாத் தலைவர்கள் அரசு செய் தத்துவ
உலகெலாம் விளங்க ஓங்கு செஞ்சுடரே
முன்னுறு மலவிருள் முழுவதும் நீக்கியே
என்னுள வரைமேல் எழுந்த செஞ்சுடரே
ஆதியும் நடுவுடன் அந்தமும் கடந்த
ஜோதியாய் என்னுளம் சூழ்ந்த மெய்ச்சுடரே

## 52. அருட் கனல்

உள்ளொளி ஓங்கிட உயிரொளி விளங்கிட
வெள்ளொளி காட்டிய மெய்யருட்கனலே

நலங்கொளப் புரிந்திடு ஞானயா கத்திடை
வலஞ்சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க்கனலே
வேதமும் ஆகமவிரிவும் பரம்பர
நாதமும் கடந்த ஞானமெய்க் கனலே
எண்ணிய எண்ணிய எல்லாம் தர எனுள்
நண்ணிய புண்ணிய ஞானமெய்க் கனலே
வலமுறு சுத்தசன் மார்க்க நிலைபெறு
நலமெலாம் அளித்த ஞானமெய்க் கனலே

## 53. பரஞ்சுடர்

இரவொடு பகலிலா இயல்பொது நடமிடு
பரம வேதாந்தப் பரம்பரம் சுடரே

வரநிறை பொதுவிடை வளர்திரு நடம்புரி
பரம சித்தாந்தப் பதிபரஞ் சுடரே
சமரச சத்தியச் சபையில் நடம்புரி
சமரச சத்தியத் தற்சுயம் சுடரே

## 54. அருட்பெருஞ்ஜோதி

சபைஎன துளமெனத் தானமர்ந்து எனக்கே
அபயம் அளித்ததோர் அருட்பெருஞ்ஜோதி
மருளெலாம் தவிர்த்து வரமெலாம் கொடுத்தே
அருளமுது அருத்திய அருட்பெருஞ்ஜோதி
வாழிநின் பேரருள் வாழிநின் பெருஞ்சீர்
ஆழி ஒன்றளித்த அருட்பெருஞ்ஜோதி

என்னையும் பொருளென எண்ணி என்னுளத்தே
அன்னையும் அப்பனும் ஆகி வீற்றிருந்து
உலகியல் சிறிதும் உளம்பிடி யாவகை
அலகில்பே ரருளால் அறிவது விளக்கிச்
சிறுநெறி செல்லாத் திறனளித்து அழியாது
உறுநெறி உணர்ச்சி தந்து ஒளியுறப் புரிந்து
சாகாக் கல்வியின் தரமெலாம் உணர்த்திச்
சாகா வரத்தையும் தந்துமேன் மேலும்
அன்பையும் விளைவித்து அருட்பே ரொளியால்
இன்பையும் நிறைவித்து என்னையும் நின்னையும்

ஓர்உரு ஆக்கியான் உன்னியபடி எலாம்
சீர்உறச் செய்துயிர்த் திறம்பெற அழியா
அருளமுது அளித்தனை அருள்நிலை ஏற்றினை
அருளறிவு அளித்தனை அருட்பெருஞ்ஜோதி
வெல்கநின் பேரருள் வெல்கநின் பெருஞ்சீர்
அல்கலின் றோங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகுயிர்த் திரளெலாம் ஒளிநெறி பெற்றிட
இலகும் ஐந்தொழிலையும் யான் செயத் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி

மூவரும் தேவரும் முத்தரும் சித்தரும்
யாவரும் பெற்றிடா இயல்எனக் களித்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி

சித்திகள் அனைத்தையும் தெளிவித்து எனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
உலகினில் உயிர்களுக்கு உறும்இடையூ றெலாம்
விலகநீ அடைந்து விலக்குக மகிழ்க 1590.

சுத்த சன்மார்க்க சுகநிலை பெறுக
உத்தமன் ஆகுக ஓங்குக என்றனை
போற்றிநின் பேரருள் போற்றிநின் பெருஞ்சீர்
ஆற்றலின் ஓங்கிய அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

திருச்சிற்றலம்பலம்.